
உ
சிவமயம்



# நமசிவாய பாலாம்பிகை தீபம்

அமரத்துவம் அடைந்த

## திருமதி.பாலாம்பிகை நமசிவாயம்

அவர்களுக்கு சமர்ப்பணம்

15.07.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"



புங்குடுதீவு 9ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும்,
2ம் கட்டை முரசுமோட்டை, 5B பாரதி வீதி,
கூமாங்குளம் வவுனியாவை வசிப்பிடமாகவும்,
தற்போது பின்லாந்தை வதிவிடமாகக்
கொண்டவருமான

**அமரர்**

# திருமதி.பாலாம்பிகை நமசிவாயம்

*அவர்களின் சிவபதப்பேறு குறித்த*

# நமசிவாய பாலாம்பிகை தீபம்

**15.07.2016**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது அன்புத் தெய்வத்தின்
பாதார விந்தங்களுக்கு இந்நூல்

# சமர்ப்பணம்

சொல்லுருவில் உண்மையாய்
செயல்வடிவில் பெருமையாய்
வாழ்நாளில் கண்ணியவராய்
வாழ்வுத்துணையை கண்ணியமாய்
பிள்ளைகளை நல் காவியமாய்
மருமக்களை "மறு" மக்களாய்
உடன்பிறப்புக்களை உன்னதமாய்
உற்றார், அயலாரை உவகையாய்
பேரர், பூட்டர்களை பேரன்பாய்
கட்டியெழுப்பிய பெருந்தகைக்கு
இந்நூலை சமர்ப்பிக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இங்ஙனம்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



மண் மகிழ
26.04.1944

அமரர்

கண் நெகிழ
15.06.2016

# திருமதி.பாலாம்பிகை நமசிவாயம்

அவர்களின்

## தீதி வெண்பா

ஆண்டுபுகழ் துர்முகிஅருள் ஆனி புதன்தனில்
மூண்டுவரும் வளர்பிறை ஏகாதசியில் நல் மாண்புமிகு
பாலாம்பிகை மாஇருள் ஞாலம் விடுத்து
மன்னு சிவன் தாள் சேர்ந்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் திருமதி.பாலாம்பிகை நமசிவாயமும் அவரின் கணவர் அமரர் கந்தையா நமசிவாயமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரப் பாடல்கள்
## பஞ்ச புராணம்



## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமது உள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

## தேவாரம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடி கொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

## திருவாசகம்

பால் நினைந்தூட்டும் தாயினுஞ் சாலப்
பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந் தனவே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும்! மீண்டும் பிறப்புண்டேலுன்னை யென்று
மறவாமை வேண்டுமின்னும் வேண்டுநான் மகிழ்ந்து பாடி
அறவாநீ யாடும்போதுன் னடியின் கீழிருக்க என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## வாழ்த்து

ஆறிரு தடந்தோள் வாழ்க
ஆறுமுகம் வாழ்க, வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க
குக்குடம் வாழ்க, செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க
யானைதன் அணங்கும் வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க
வாழ்க சீர் அடியார் எல்லாம்.

***திருச்சிற்றம்பலம்***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர்
# திருமதி.பாலாம்பிகை நமசிவாயம்
### அவர்களின்
## வாழ்க்கைப் பயணத்தில் ஒரு நிமிடம்...

இந்து சமுத்திரத்தின் முத்தெனத் திகழும் ஈழமணித் திருநாட்டின் வடபால் அமைந்த எழில் கொஞ்சும் யாழ்ப்பாணத்தின் தென்மேற்கே சிதறுண்ட முத்துக்களான சப்த தீவுகளில் வேல், ஆல், தெங்கு, பூவரசு என கால்நடை வளங்களும் கற்பகத் தருக்களும் கொண்ட பொங்குகடல் தாலாட்டும் மணிமுடித் தீவான புங்குடுதீவின் நல்லாளன் பொன்னையா செல்லாச்சி தம்பதியருக்கு செல்லப் பிள்ளையாக பாலாம்பிகை நமசிவாயம் 1944ம் ஆண்டு சித்திரை மாதம் இருபத்தியாறாம் (26)ம் திகதி இப்பூவுலகில் அவதரித்தார்.

இவரது உடன் பிறப்புக்களாக அமரர் சுந்தரம்பிள்ளை, அமரர் நடராஜா, சிவக்கொழுந்து, அமரர் சுந்தரலிங்கம், கிருஷ்ணபிள்ளை ஆகிய மூத்த சகோதரர்களுடன் கூடிக்குலாவி மகிழ்வுடன் வாழ்ந்து வந்தார். சிறு வயதிலேயே சிறந்த அறிவாற்றலும், புன்னகையான முகமும் கூடவே வரும் நற்குண அம்சங்களாகும். பெற்றோரிடமும் சகோதரர்களிடமும் சிறந்த மதிப்புக் கொண்டதோடு சொல், செயல், மாறாத குணம் கொண்டவராகத் திகழ்ந்தார்.

ஆரம்பக் கல்வியை புங்குடுதீவு சண்முகநாதன் வித்தியாலயத்தில் பயின்றார். அதன் பிறகு தந்தையார் "கிருஷ்ணா ஸ்ரோர்ஸ்" என்ற வணிக ஸ்தாபனத்தை மத்துகமவில் நடாத்தி வந்தமையால் இவர் தன்னுடைய இடைநிலைக் கல்வியை மத்துகம தமிழ் பாடசாலையில் பயின்றார். 1958ம் ஆண்டு ஏற்பட்ட கலவரத்தால் அவ்விடம் விட்டு வெளியேறி ஈழத்தின் நெற்றியான முரசுமோட்டை 3ம் யுனிற்றில் பெற்றோருடன் குடியேறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வேளையில் பெற்றோர் இவருக்கு நெடுந்தீவைச் சேர்ந்த கந்தையா நாகமுத்து தம்பதியரின் மகனான நமசிவாயத்தை திருமணம் செய்து வைத்தனர். தமது இல்லற வாழ்வை இலட்சியமிடுக்குடன் உறவினரையும் அயலவரையும் நேசித்து உதவிக்கரம் நீட்டி அன்புடன் வழி நடத்தினர்.

இல்லறவாழ்வின் பேறாய் பண்பும் இரக்கமும் பணிவும் நிறைந்த மகளாய் ஞானலோசினி (காவேரி) தலைமகளாய் மழலை பேச, வாஞ்சையோடு அடுத்து வந்தாள் அன்பரசி (அன்பு), இனிய தவப் புதல்வனாய் வாமதேவனையும், விடுதலைக்காய் கரம் ஏந்திய வீரப் புதல்வனாய் அமரர் சிறீதரனையும் (சிறீ), உற்றாரையும் மற்றாரையும் தாயைப் போல் அனைத்து உதவி செய்ய நித்தியானந்தனையும் (ரவி), கெங்கநாதனையும் (நாதன்) பெற்றெடுத்தார். இவர்களோடு தரணிபுக கடையவளாய் கவிதா வந்துதித்தார். சப்த ஈஸ்வரங்களாய் வான வில்லின் வர்ணங்களாய் ஏழு புதல்வர்களைப் பெற்று கல்வி வாய்ப்புக்களை உரியவாறு பெற்றுக் கொடுத்தார்.

நற்பண்புள்ளவர்களாகவும், சிறந்த கல்வியறிவுடையவர் களாகவும், பிள்ளைகளை வளர்த்து வந்தார். பிள்ளைகள் வளர்ந்து திருமண வயதினை எட்டிய வேளையில் பெருமையுடன் மூத்த மகள் ஞானலோசனிக்கு திருஞானசம்பந்தரையும், இரண்டாவது மகள் அன்பரசிக்கு மதியழகனையும், மூத்த மகன் வாமதேவனுக்கு வினோதினியையும், இரண்டாவது மகன் நித்தியானந்தனுக்கு ஜெகதீஸ்வரியையும், கெங்கநாதனுக்கு சறோஜினியையும், கவிதாவிற்கு தனேஸ்வரனையும் துணையாக தேர்ந்து எடுத்தார். தனது இறுதிக்காலத்தை பேரப்பிள்ளைகளுடனும் பூட்டப்பிள்ளைகளுடனும் இனிமையாகவும் மகிழ்வாகவும் கழித்து வந்தார்.

தனது இல்லறத்தின் நற்பயனாய் விளைந்த முத்துக்களில் ஒன்றான மகன் சிறீதரனின் இழப்பினால் துவண்ட அன்னை சைவ விரதங்கள், சமய அனுஸ்டானங்களைக் காத்து ஆன்மீக வழியில் தன்னை ஈடுபடுத்தி வந்தார். இறுதிக் காலத்தில் இளைய மகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதனுடன் பின்லாந்தில் வசித்து வந்தவேளை கணவனாகிய நமசிவாயம் (நல்லதம்பி) 2014ம் ஆண்டு ஆனி மாதம் 11ம் திகதி இறையடி சேர்ந்தமையால் கவலை வாட்ட நோயும் அவரை ஆட் கொண்டது.

இளம் வயதிலிருந்தே புங்குடுதீவு இராஜராஜேஸ்வரி அம்பாளில் தீராத பக்தி கொண்டவர். இவரது சிரித்த முகமும் சீரான சிந்தனையும் நெற்றியில் நிறைந்த வெண்ணீறும் ஆழ்ந்த பக்தியும் இவரின் அழகு அடையாளங்களாகும்.

உறவினர், அயலவர்களின் சுகதுக்கங்களில் கலந்து கொள்ளுவதும், ஆறுதல் கூறுவதும் சரீர மற்றும் பணஉதவி செய்வதிலும் இவருக்கு நிகர் இவரே தான். எல்லோர் வாழ்விலும் ஒளி ஏற்றி வைத்த உத்தமியாவாள். பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப் பிள்ளைகள் எல்லோருடைய பிறந்த தினங்களை ஞாபகம் வைத்து தொலைபேசி, Skype, Viber போன்றவற்றினூடாக வாழ்த்துத் தெரிவித்து நலம் விசாரிப்பார். பிறந்த ஊர், வாழ்ந்த ஊரில் ஏற்படும் சுக துக்கங்களை உறவினர்களுடன் பகிர்ந்து கொள்வார்.

கணவரது இழப்பினால் உடல் நலமின்றி இருந்த போதிலும் தான் வாழ்ந்த ஊராகிய முரசுமோட்டையில் கால் வைக்க வேண்டு மென்ற ஆவலில் வைத்தியசாலை சென்றவர் ஆனி மாதம் 15ம் திகதி 2016ஆம் ஆண்டு புதன்கிழமை அனைத்து நெஞ்சங்களையும் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு "புன்னகையையே புனிதமாக்கி புகழிடம் சென்றார் இறைவனிடம்".

இவரின்ஆத்மா சாந்தியடைய "மனிதருள் மாணிக்கத்துக்காய் ஆழப் பிரார்த்திப்போம்.

**கண்ணகியே அம்மா கனிவான பார்வைதனில்**
**ஆழ்ந்த தியானம் அடைந்தவரை**
**காத்தருள்வாய் தாயே ஈஸ்வரியே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் திருமதி.பாலாம்பிகை நமசிவாயம் அவர்களின் வாழ்வின் நிழல்கள் சில...















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகள் புலம்பல்

அம்மா என்றழைக்க இனியாருள்ளனர்
பாசத்துடன் எமையணைத்து
பரிவு காட்டிய பெருந்தகையே
ஒரு தடவை எழும்பி வந்து
ஒரு சொல் பேச மாட்டீர்களா?
கடமை, கட்டுப்பாட்டுடன்
எமை வளர்த்த அன்னையே உங்கள் நினைப்புடனே
எம் நெஞ்சம் அமைதி கொள்ளும்.

## மருமக்கள் புலம்பல்

எம் அன்பு மாமியே! என்றும் உங்கள்
மக்களாக அன்பு காட்டி அரவணைத்தீரே!
சுகநலம் விசாரிக்கும் உங்கள் நற்செயலால்
நித்தம் எம்மில் அன்பு காட்டி
பாசம் செலுத்தினீரே!
எங்கு சென்றுவிட்டீர்கள் தனி வழியே?
ஏங்கித் தவிக்கின்றோம் இங்கு – மாமி

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

சென்றதெங்கே எங்கள் அம்மம்மா
சொல்லாமல் எங்குற்றீர் அப்பம்மா
உங்கள் குரல் கேளாது ஏங்குகின்றோம்
தொலைபேசி, கொம்பியூட்டர் எல்லாம்
மௌன அஞ்சலி செலுத்துகின்றன
எங்கு சென்று வீட்டீர்கள் தனிவழியே?
செல்ல மிரட்டலுக்கும், அரவணைப்புக்குமாய்
அங்கும் இங்கும் பார்க்கின்றோம்
எங்கு சென்று விட்டீர்கள் அம்மம்மாவே! அப்பம்மாவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூட்டப்பிள்ளைகள் புலம்பல்

பூத்த முகத்தில் இரு பொன் விழிகள்
காத்த அனுபவத்தால் கற்கண்டு மொழிகள்
சேர்த்து வைத்த செல்வமெனச் சேர்ந்து கொஞ்சும் கனிவாய்
பூட்டியை இழந்து விட்டோம் தாளாது உலைகின்றோம்.

## பெறாமக்கள் புலம்பல்

அன்பும், பண்பும் பாசமும் கொண்டு
எமையெல்லாம் அணைத்து
அரும் புத்திமதி சொல்லி வந்தீர்
கடுஞ் சொல்லோ, சுடுஞ் சொல்லோ
உங்கள் நாவினால் வந்ததை
ஒரு போதும் நாமறியோம்
பெற்ற தாய்க்கு ஈடாக
எம்முடனே இருந்தீர்கள்
எம் வாழ்வு சிறப்பதற்கு
ஏணியாய் இருந்தீர்கள்
இனித்து கதைப்பீர்கள் இப்போது
எங்கு சென்றீர்கள் எமைவிட்டு
தவித்து துடிக்கின்றோம் – தரணியிலே
மீண்டும் உங்களை காண்பதற்கு.

## உற்றார், உறவினர் புலம்பல்

அன்புடனும் பண்புடனும்
இப்பூவுலகில் வாழ்ந்து
நேசத்துடனும் பாசத்துடனும்
எம்மோடு பழகி
இன்சொல் பேசி இன்முகம் காட்டி
சுற்றத்தார்களுடன்
அன்பும் ஆதரவும் கொண்டு
நல்லவராய் எல்லோருக்கும்
உதவி செய்யும் உத்தம
குணத்துடன் வாழ்ந்து எமக்கு
வழிகாட்டியே பொக்கிஷமாய் – இருந்தீரே பாலாம்பிகையே
உங்கள் பிரிவால் வருந்துகின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புன்னகையோடு பூத்த திருநீற்றுடன்...

கலைந்த கனவோடு புன்சிரிப்பையும்
பூத்த திருநீற்றுடன் உன் முகத்தையும்
தேடுகின்றோம் – பாலாம்பி எங்கு சென்றாய்!
கணனியை பார்க்கும் போது கண்ணீர் தான்
வருகுதம்மா! எங்கே எம் உடன்பிறப்பு
வீட்டிலே கடைசியாய் இருந்த போதும்
எமக்கு பாசத்தை ஊட்டி முதல்வியாய் இருந்தாய்
நீயின்றி நாங்கள் குரல்வளை அறுந்து
கத்தவும் நாதியற்று வைத்தியசாலையில்
படுத்திருக்கின்றோம் ஏனம்மா எமைவிட்டு சென்றாய்
உனது பிரிவு என்னை படுக்கையாக்கியது
உனது ஏக்கம் எனது குரலை அடைத்தது
கணனியில் உன்முகம் காணாது பரிதவிக்கின்றேன்
காலை பத்தரைக்கு கையில் தேனீருடன்
கணனியில் காட்சி தருவாய் தினமும்
இனி யாரையம்மா நாம் பார்ப்போம்
நாதியற்று கரைகின்றோம் உன் நினைவில்.

**சகோதரர்கள்**
**சி.சிவக்கொழுந்து, பொ.கிருஷ்ணபிள்ளை**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளக் குமுறல்



மானிட தெய்வங்களாய் பூமியில் அவதரித்த
எங்கள் மாமா மாமியே!
சிதறிய முத்தைப் போல் சிந்தை கலங்க விட்டதேனோ!
உங்கள் அறிவுரைகள் எங்கள் அரியணைகள்
ஆன்மீக நெறியோடு வாழ்வு நெறி கண்டீர்
வாழ்க்கையோடு சைவ விரதங்கள் பல காத்தீரே
உற்றார், ஊராருடன் பலமான உறவு காத்தீர்
எல்லோரும் நன்றாய் வாழ சரீர பொருள் உதவி செய்தீர்
திருமணங்கள் பல நடக்கவும் வெளியூர் பலர் போகவும்
வழியமைத்த அன்னையவள் நிஜ நித்திரை அடைந்த தேனோ!
மாமி உங்களை நம்பியல்லோ நான் வந்தேன் ஊர்விட்டு
அண்ணி என்றழைக்காத நாளில்லை அம்மா!
மாலை வீடு வந்து மாமி என்ன புதினம் சொன்னா!
எனக் கேட்கும் நான்! மாமி இல்லை என நம்ப முடியுமா?
மாமி மாமா எமது வாழ்வின் அடிப்படைகள்
அமைத்து வாழ வைத்த தெய்வங்களே
எங்கம்மா போனீர்கள் எங்கு ஐயா போனீர்கள்!

அலங்க, மலங்க வைத்து நினைத்து நினைத்து
கலங்க வைத்து நிஜ நித்திரை அடைந்ததேனோ?
புன்னகையோடு பூத்த திருநீற்றுடன் உங்களை
எப்போது இவ்வுலகில் இனிக் காண்போம்.

**அண்ணி, நிதி,**
**ராசன், ராசாத்தி குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்ம ஈடேற்றம்

ஜென்மம் நிறைந்தது சென்றவர் வாழ்க
சிந்தை கலங்கிட வந்தவர் வாழ்க
நீரில் மிதந்திடும் கண்களும் காய்க
நிம்மதி நிம்மதி இவ்விடம் சூழ்க

ஜனனமும் பூமியில் புதியது இல்லை
மரணத்தைப் போலொரு பழையதும் இல்லை
இரண்டும் இல்லாவிடில் இயற்கையும் இல்லை
இயற்கையின் ஆணைதான் ஞானத்தின் எல்லை.

பாசம் உலாவிய கண்களும் எங்கே
பாய்ந்து துளாவிய கைகளும் எங்கே
தேசம் அளாவிய கால்களும் எங்கே
தீ உண்டது என்றது சாம்பலுமிங்கே

கண்ணில் தெரிந்தது காற்றுடன் போக
மண்ணில் பிறந்தது மண்ணுடன் சேர்க்க
எலும்பு சதை கொண்ட உருவங்கள் போக
எச்சங்களால் அந்த இன்னுயிர் வாழ்க

பிறப்பு இல்லாமலே நாளொன்றும் இல்லை
இறப்பு இல்லாமலும் நாளொன்றும் இல்லை
நேசத்தினால் வரும் நினைவுகள் தொல்லை
மறதியைப் போலொரு மாமருந்தில்லை.

கடல் தொடும் ஆறுகள் கலங்குவதில்லை
தரை தொடும் தாரைகள் அழுவதும் இல்லை
நதி மழை போன்றதே விதி என்றும் கண்டும்
மதி கொண்ட மானுடர் மயங்குவதென்ன




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணத்தினால் சில கோபங்கள் தீரும்
மரணத்தினால் சில சாபங்கள் தீரும்
வேதம் சொல்லாததை மரணங்கள் கூறும்
விதை ஒன்று வீழ்ந்திடில் செடி வந்து சேரும்

பூமிக்கு நாமொரு யாத்திரை வந்தோம்
யாத்திரை தீரும் முன் நித்திரை கொண்டோம்
நித்திரை போவது நியதி என்றாலும்
யாத்திரை என்பது தொடர் கதையாகும்

தென்றலின் பூங்கரம் தீண்டிடும் போதும்
சூரிய கீற்றொளி தோன்றிடும் போதும்
மழலையின் தேன்மொழி செவியுறும் போதும்
மாண்டவர் எம்முடன் வாழ்ந்திடக் கூடும்

மாண்டவர் சுவாசங்கள் காற்றுடன் சேர்க்க
தூயவர் கண்ணொளி சூரியன் சேர்க்க
பூதங்கள் ஐந்திலும் பொன்னுடல் சேர்க்க
போனவர் புண்ணியம் எம்முடன் சேர்க்க.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையார் கதை



## காப்பு

கரும்பு மிளநீருங் காரெள்ளுந் தேனும்
விரும்பு மவல்பலவும் மென்மேல் – அருந்திக்
குணமுடைய னாய்வந்து குற்றங்கள் தீர்க்குங்
கணபதியே யிக்கதைக்குக் காப்பு.

திருவிளங்கு மான்மருகா சேவதனி லேறி
வருமரன்றான் ஈன்றருளு மைந்தா – முருகனுக்கு
முன்பிறந்தயானை முகவா உனைத்தொழுவேன்
என்கதைக்கு நீயென்றுங் காப்பு.

## விநாயகர் துதி

திருவாக்குஞ் செய்கருமங் கைகூடுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத் தானைக்
காதலாற் கூப்புவர்தங் கை.

ஒற்றை மருப்பு மோரிரண்டு கைத்தலமும்
வெற்றி புனைந்த விழிமூன்றும் – பெற்றதொரு
தண்டைக்கால் வாரணத்தைத் தன்மனத்தி லெப்பொழுதுங்
கொண்டக்கால் வராது கூற்று.
பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்தருவேன் – கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சப்பாணி

எள்ளுப் பொரிதே னவலப்ப
மிக்கும் பயறு மிளநீரும்
வள்ளிக்கிழங்கும் மாம்பழமும்
வாழைப்பழமும் பலாப்பழமும்
வெள்ளைப் பாலும் மோதகமும்
விரும்பிப்படைத் தேன்சந்நிதியில்
கொள்ளைக் கருணைக் கணபதியே
கொட்டியருள்க சப்பாணி
சண்டப் பெருச்சா ளியேறிச்
சடைகொண்டு வையத்துலாவி

சண்டப் பெருச்சா ளியேறிச் சடைகொண்டு வையத்துலாவி
அண்டத் தமரர் துதிக்க வடியார்க் கருளும் பிரானே
எண்டிக்கு மன்பர்கள் பார்க்க வினையற்ற பேரொளி வீசக்
குண்டைக் கணபதி நம்பி கொடுங்கையாற் சப்பாணிகொட்டே.

## சரஸ்வதி துதி

புத்தகத் துள்ளுறை மாதே பூவி லமர்ந்திடு வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளை நங்காய் வேதப் பொருளுக் கிறைவி
முத்தின் குடையுடை யாளே மூவுலகுந் தொழு தேத்துஞ்
செப்புக் கவித்த முலையாய் செவ்வரி யோடிய கண்ணாய்
தக்கோலந் தின்னும் வாயாய் சரஸ்வதி யெனுந் திருவே
எக்கால முமுனைத் தொழுவே னியலிசைநாடகமென்னும்
முத்தமிழ்க் கல்விக ளெல்லா முழுது மெனக்கருள்செய்தென்
சித்தந் தனில்நீ யிருந்து திருவருள் செய்திடுவாயே.

## அதிகாரம்

பொன்னிறங் கடுக்கும் புனற்செறி குடுமித்
தென்மலை யிருந்த சீர்சால் முனிவன்
கந்த மும்மதக் கரிமுகன் கதைதனைச்
செந்தமிழ் வகையாற் றெளிவுறச் செப்பினன்
அன்னதிற் பிறவில் அரிறபத் திரட்டித்
தொன்னெறி விளங்கச் சொல்லுவன் கதையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதை

மந்தர கிரியில் வடபா லாங்கோர்
இந்துதவழ் சோலை யிராசமா நகரியில்
அந்தண னொருவனு மாயிழை யொருத்தியுஞ்
சுந்தரப் புதல்வரைப் பெறுதல் வேண்டிக்
கடவுளா லயமுங் கடிமலர்ப் பொய்கையுந்
தடநிழற் பள்ளியுந் தாம்பல சமைத்துப்
புதல்வரைத் தருகெனப் பொருப்பர சீன்ற
மதர்விழி பாகனை வழிபடு நாளின்
மற்றவர் புரியு மாதவங் கண்டு
சிற்றிடை யுமையாள் சிவனடி வணங்கிப்
பரனே சிவனே பல்லுயிர்க் குயிரே
அரனே மறையவர்க் கருள்புரிந் தருளென
அந்தவந் தணனுக் கிந்தநற் பிறப்பின்
மைந்தரில் லையென்று மறுத்தர னுரைப்ப
எப்பரி சாயினு மெம்பொருட் டொருசுதன்
தப்பிலா மறையோன் றனக்கருள் செய்கென
எமையா ளுடைய யுமையாண் மொழிய
இமையா முக்க ணிறைவன் வெகுண்டு
பெண்சொற் கேட்டல் பேதமை யென்று
பண்சொற் பயிலும் பாவையை நோக்கிப்
பேதாய் நீபோய்ப் பிறவென மொழிய
மாதுமை யவளும் மனந்தளர் வுற்றுப்
பொன்றிடு மானிடப் புன்பிறப் பெய்துதல்
நன்றல வென்றே நடுக்கமுற் றுரைப்பக்
கறைமிடற் றண்ணல் கருணை கூர்ந்து
பிறைநுத லவட்குநீ பிள்ளை யாகச்
சென்றவண் வளர்ந்து சிலபகற் கழிந்தால்
மன்றல்செய் தருள்வோம் வருந்தலை யென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடைகொடுத் தருள விலங்கன்மா மகளும்
பெடைமயிற் சாயற் பெண்மக வாகித்
தார்மலி மார்பன் சதுர்மறைக் கிழவன்
சீர்மலி மனைவி திருவயிற் றுதித்துப்
பாவையுஞ் சிற்றிலும் பந்தொடு கழங்கும்
யாவையும் பயின்ற வியல்பின ளாகி
ஐயாண் டடைந்தபி னன்னையு மத்தனும்
மையார் கருங்குழல் வாணுத றன்னை
மானுட மறையோர்க்கு வதுவை செய்திடக்
கானமர் குழலியைக் கருதிக் கேட்பப்
பிறப்பிறப் பில்லாப் பெரியோற் கன்றி
அறத்தகு வதுவைக் கமையேன் யானென
மற்றவன் றன்னையுன் மணமகனாகப்
பெற்றிட வரிதெனப் பெயர்ந்தவர் பேச
அருந்தவ முயற்சியா லணுகுவே னியானெனக்
கருந்தட நெடுங்கட் கவுரியங் குரைப்ப
மருமலி கமல மலஉத்தடத் தருகிற்
றருமலி நிழற்றவச் சாலை யமைத்துப்
பணியணி பற்பல பாங்கியர் சூழ
அணிமலர்க் குழலுமை யருந்தவம் புரிதலும்
அரிவைத னருந்தவ மறிவோம் யாமென
இருவரு மறியா விமையவர் பெருமான்
மானிட மேந்தும் வண்ணம தொழிந்து
மானிட யோக மறையவ னாகிக்
குடையொடு தண்டுநற் குண்டிகை கொண்டு
மடமயி றவம்புரி வாவிக் கரையிற்
கண்ணுதல் வந்து கருணை காட்டித்
தண்ணறுங் கூந்தற் றையலை நோக்கி
மின்பெறு நுண்ணிடை மெல்லிய லாய்நீ
என்பெறத் தவமிங் கியற்றுவ தென்றலுங்
கொன்றைவார் சடையனைக் கூடவென் றுரைத்தலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றெனச் சிரித்து நான்மறை யோனும்
மாட்டினி லேறி மான்மழுத் தரித்துக்
காட்டினிற் சுடலையிற் கணத்துட னாடிப்
பாம்பு மெலும்பும் பஃறலை மாலையுஞ்
சாம்பரு மணிந்து தலையோ டேந்திப்
பிச்சைகொண் டுழலும் பித்தன் றன்னை
நச்சிநீ செய்தவ நகைதரு முனக்கெனப்
பூங்கொடி யருந்தவம் பூசுரன் குலைத்தலும்
ஆங்கவ ணாணமுற் றணிமனை புகுதச்
சேடியர் வந்து செழுமலர்க் குழலியை
வாடுத லொழிகென மனமிகத் தேற்றிச்
சிந்துர வாணுதற் சேடியர் சிலர்போய்த்
தந்தைதா யிருவர் தாளிணை வணங்கி
வாவிக் கரையில் வந்தொரு மறையோன்
பாவைதன் செங்கையைப் பற்றின னென்றலுந்
தோடலர் கமலத் தொடைமறை முனியை
ஆடக மாடத் தனிமனை கொணர்கென
மாடக யாழ்முரல் மங்கைய ரோடி
நீடிய புகழாய் நீயெழுந் தருளென
மைமலர்க் குழலி வந்தெனை யழைக்கில்
அம்மனை புகுவனென் றந்தண னுரைத்தலும்
பொறறொடி நீபோய்ப் பொய்கையி னின்ற
நற்றவ முனியை நடத்திக் கொணர்கென
சிவனை யிகழ்ந்த சிற்றறி வுடையோன்
அவனையான் சென்றிங் கழைத்திடே னென்று
சிற்றிடை மடந்தையுஞ் சீறின ளாகி
மற்றைய மாதா மதிமுக னோக்கி
நெற்றியிற் கண்ணுடை நிமலனுக் கல்லதென்
பொற்பமர் கொங்கை பொருந்துதற் கரிதால்
மானிட வேட மறையவன் றனக்கு
யான்வெளிப் படுவ தில்லையென் றிசைப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையிடை வந்த மாமுனி தன்னை
இணையடி தொழுத விளையோர்க் கியல்பெனத்
தந்தையுந் தாயுந் தகைபெற மொழியச்
சிந்தை குளிர்ந்து சீறுத லொழிந்து
தாய்சொன் மறுத்தல் பாவமென் றஞ்சி
ஆயிழை தானு மவனெதிர் சென்று
சுற்றிவந் தவனடி சுந்தரி வணங்கி
மற்றவன் றன்னை மனையிற் கொணர்ந்து
ஆதியம் பகவற் கன்ப னாகும்
வேதியன் பழைய விருத்தனென் றெண்ணி
ஆசன நல்கி யருக்கிய முதலாப்
பாதபூ சனைகள் பண்ணிய பின்னர்ப்
போனகம் படைத்துப் பொரிக்கறி பருப்புநெய்
ஆன்பால் மாங்கனி யழகிய பலாச்சுளை
தேன்கத லிப்பழஞ் சீர்பெறப் படைத்து
அந்தணன் றன்னை அமுதுசெய் வித்துச்
சந்தனங் குங்குமச் சாந்திவை கொடுத்துத்
தக்கோ லதலதொடு சாதிக் காயும்
கர்ப்பூ ரத்தொடு கவின்பெறக் கொண்டு
வெள்ளிலை யடைக்காய் விளங்கிய பொன்னின்
ஒள்ளிய தட்டி லுகந்துமுன் வைத்துச்
சிவனெனப் பாவனை செய்து நினைந்து
தவமறை முனிதனைத் தாளிணை வணங்கத்
தேனமர் குழலி திருமுக நோக்கி
மோனமா முனிபுன் முறுவல் காட்டிக்
கற்றைச் சடையுங் கரமொரு நான்கும்
நெற்றியி னயனமு நீல கண்டமும்
மானு மழுவு மலர்கரத் திலங்கக்
கூன்மதி நிலவுங் கொழித்திட முடிமேல்
வரந்தரு முதல்வன் மடமயில் காணக்
கரந்ததன் னுருவங் காட்டிமு னிற்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரகத மேனி மலைமக டானும்
விரைவொடங் கவனடி வீழ்ந்திறைஞ் சினளே
அரிய யனிந்திர னமரர் விஞ்சையர்
கருடர் கின்னரர் காய வாசியர்
ஏதமில் முனிவ ரவுணரி ராக்கதர்
பூத ரியக்கர்கிம் புருட ரலகை
சித்தர்தா ரகைகந் தருவர்கள் முதலாய்க்
கணிக்கரும் பதினெண் கணத்திலுள் ளவரும்
மணிக்கருங் களத்தனை வந்தடைந் தகற்பின்
மன்றலங் குழலிக்கு வதுவைநாட் குறித்துத்
தென்றல்வந் திலங்கு முன்றி லகத்துப்
பொன்றிகழ் பவளப் பொற்கா னாட்டி
மாணிக் கத்தால் வளைபல பரப்பி
ஆணிப்பொற் றகட்டா லழகுற வேய்ந்து
நித்தில மாலை நிரைநிரை தூக்கிப்
பத்திக டோறும் பலமணி பதித்துத்
தோரண நாட்டித் துகில்விதா னித்துப்
பூரணப் பொற்குடம் பொலிவுற வைத்துத்
திக்குத் தோறுந் திருவிளக் கேற்றிப்
பக்திப் படர்முளைப் பாலிகை பரப்பிக்
கன்னலுங் கமுகுங் கதலியு நாட்டிப்
பன்மலர் நாற்றிப் பந்தர்சோ டித்து
நலமிகு கைவலோர் நஞ்சணி மிடற்றனைக்
குலவிய திருமணக் கோலம் புனைந்தார்
வருசுரர் மகளிர் மலைமக டன்னைத்
திருமணக் கோலஞ் செய்தன ராங்கே
எம்பி ரானையு மிளங்கொடி தன்னையும்
உம்ப ரெல்லா மொருங்குடன் கூடிக்
கடலென விளங்குங் காவணந் தன்னிற்
சுடர்விடு பவளச் சுந்தரப் பலகையின்
மறைபுபுகழ்ந் தேத்த மகிழ்ந்துட னிருத்திப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறையொலி யோடு பணிவளை யார்ப்ப
வதுவைக் கேற்ற மறைவிதி நெறியே
சதுர்முக னோமச் சடங்குக ளியற்றத்
தறுகலற் றொளிபொற் றாலி பூட்டிச்
சிறுமதி நுதலியைச் சிவன்கைப் பிடித்தபின்
அரிவலஞ் சூழ வெரிவலம் வந்து
பரிவுடன் பரிமளப் பாயலில் வைகிப்
போதணி கருங்குழற் பூவைதன் னுடனே
ஓதநீர் வேலைசூ ழுஞ்சையம் பதிபுக
ஏரார் வழியி னெண்டிசை தன்னைப்
பாரா தேவா பணிமொழி நீயென
வருங்கருங் குழலாண் மற்றுமுண் டோமெனத்
திருந்திழை மடந்தை திரும்பினள் பார்க்கக்
களிறும் பிடியுங் கலந்து விளையாடல்கண்
டொளிர்மணிப் பூணா ளுரவோ னுடனே
இவ்வகை யாய்விளை யாடுவோ மீங்கென
அவ்வகை யரனு மதற்குடன் பட்டு
மதகரி யுரித்தோன் மதகரி யாக
மதர்விழி யுமைபிடி வடிவம தாகிக்
கூடிய கல்வியிற் குவலயம் விளங்க
நீடிய வானோர் நெறியுடன் வாழ
அந்தணர் சிறக்க வானினம் பெருகச்
செந்தழல் வேள்விவே தாகமஞ் சிறக்க
அறம்பல பெருக மறம்பல சுருங்கத்
திறம்பல வரசர் செகதலம் விளங்க
வெங்கரி முகமும் வியன்புழைக் கையோ
டைங்கர தலமு மலூப்பத மிரண்டும்
பவளத் தொளிசேர் பைந்துவர் வாயுந்
தவளக் கிம்புரித் தடமருப் பிரண்டுங்
கோடிசூ ரியர்போற் குலவிடு மேனியும்
பேழைபோ லகன்ற பெருங்குட வயிறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெற்றியி னயனமு முப்புரி நூலுங்
கற்றைச் சடையுங் கனகநீண் முடியுந்
தங்கிய முறம்போற் றழைமடிச் செவியுமாய்
ஐங்கரத் தண்ணல் வந்தவ தரித்தலும்
பொங்கர வணிந்த புண்ணிய மூர்த்தியும்
மங்கை மனமிக மகிழ்ந்துட னோக்கி
விண்ணு ளோர்களும் விரிந்தநான் முகனும்
மண்ணு ளோர்களும் வந்துனை வணங்க
ஆங்கவர் தங்கட் கருள்சுரந் தருளித்
தீங்கது தீர்த்துச் செந்நெறி யளித்துப்
பாரண மாகப் பலகனி யருந்தி
ஏரணி யாலின்கீ ழினிதிரு வென்று
பூதலந் தன்னிற் புதல்வனை யிருத்திக்
காதல்கூர் மடநடைக் கன்னியுந் தானும்
மைவளர் சோலை மாநகர் புகுந்து
தெய்வ நாயகன் சிறந்தினி திருந்தபின்
வானவ ராலும் மானுட ராலுங்
கானமர் கொடிய கடுவிலங் காலுங்
கருவிக ளாலுங் கால னாலும்
ஒருவகை யாலு முயிரழி யாமல்
திரம்பெற மாதவஞ் செய்துமுன் னாளில்
வரம்பெறு கின்ற வலிமையி னாலே
ஐமுகச் சீயமொத் தடற்படை சூழக்
கைமுகம் படைத்த கயமுகத் தவுணன்
பொன்னுல கழித்துப் புலவரை வருத்தி
இந்நிலத் தவரை யிடுக்கண் படுத்திக்
கொடுந்தொழில் புரியுங் கொடுமைகண் டேங்கி
அடுந்தொழிற் குலிசத் தண்ணலு மமரருங்
கறைபடு கண்டக் கடவுளைப் போற்றி
முறையிடக் கேட்டு முப்புர மெரித்தோன்
அஞ்சலீ ரென்றவர்க் கபயங் கொடுத்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சுகைக் கரிமுகத் தண்ணலை நோக்கி
ஆனை மாமுகத் தவுணனோ டவன்றன்
சேனைகள் முழுவதுஞ் சிந்திடப் பொருது
குன்றுபோல் வளர்த்த குறட்படை கூட்டி
வென்றுவா வென்று விடைகொடுத் தருள
ஆங்கவன் றன்னோ டமர்பல வுடற்றிப்
பாங்குறு மவன்படை பற்றறக் கொன்றபின்
தேர்மிசை யேறிச் சினங்கொடு செருவிற்
கார்முகம் வளைத்த கயமுகா சுரன்மேல்
ஒற்றைவெண் மருப்பை யொடித்தவ னுரத்திற்
குற்றிட வெறிந்தான் குருதிசோஉந் திடவே
சோர்ந்தவன் வீழ்ந்து துண்ணென வெழுந்து
வாய்ந்தமூ டிகமாய் வந்தவன் பொரவே
வந்த மூடிகத்தை வாகன மாக்கி
எந்தை விநாயக னேறன னிப்பால்
எறிந்தவண் மருப்பங் கிமைநொடி யளவிற்
செறிந்தது மற்றவன் றிருக்கரத் தினிலே
வெல்லவைக் கதிர்வேல் குருதிசோர்ந் திடவே
வல்லவை தனைத்தன் மனையென மணந்தே
ஓகையோ டெழுந்தாங் குயர்படை சூழ
வாகையும் புனைந்து வரும்வழி தன்னிற்
கருச்சங் கோட்டிற் கயல்கமு கேறுந்
திருச்செங் காட்டிற் சிவனையர்ச் சித்துக்
கணபதீச் சரமெனுங் காரண நாமம்
பணபதி புகழ்தரு பதிக்குண் டாக்கிச்
சங்கரன் பார்ப்பதி தனிமன மகிழ
இங்குவந் தன்புட னெய்திய பின்னர்க்
கணங்களுக் கரசாய் கதிர்முடி சூட்டி
இணங்கிய பெருமைபெற் றிருந்திட வாங்கே
தேவர்கள் முனிவர் சித்தர்கந் தருவர்
யாவரும் வந்திவ ணேவல்செய் திடுநாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகமா யுரைக்கு மாவணித் திங்களின்
மதிவளர் பக்கம் வந்திடு சதுர்த்தியில்
விநாயகற் குரிய விரதமென் றெண்ணி
மனாதிகள் களித்து மரபொடு நோற்றார்
இப்படி நோற்றிட் டெண்ணிய பெறுநாள்
ஒப்பரும் விரதத் துறுமொரு சதுர்த்தியில்
நோற்றுநற் பூசை நுடங்கா தாற்றிப்
போற்றிசெய் திட்டார் புலவரைங் கரனை
மருமலர் தூவும் வானவர் முன்னே
நிருமலன் குமர னிருத்தம் புரிந்தான்
அனைவருங் கைதொழு தடியிணை போற்ற
வனைகழற் சந்திரன் மனச்செருக் கதனால்
பேழைபோல் வயிறும் பெருத்தகாத் திரமுந்
தாழ்துளைக் கையுந் தழைமுறச் செவியுங்
கண்டன னகைத்தான் கரிமுகக் கடவுளுங்
கொண்டனன் சீற்றங் குபேரனை நோக்கி
என்னைக் கண்டிங் கிகழ்ந்தனை சிரித்தாய்
உன்னைக் கண்டவ ருரைக்குமித் தினத்திற்
பழியொடு பாவமும் பலபல விதனமும்
அழிவுமெய் துவரென் றசனிபோற் சபித்தான்
விண்ணவ ரெல்லா மிகமனம் வெருவிக்
கண்ணருள் கூருங் கடவுளித் தினத்திற்
கோரவெஞ் சினமிகக் கொண்டன னந்நாண்
மார்கழித் திங்கண் மதிவளர் பக்கஞ்
சதயந் தொட்ட சட்டிநல் விரதமென்
றிதயத் தெண்ணி யாவரு நோற்றார்
இப்புவி மாந்த ரியம்பிய விரதம்
வைப்புட னோற்ற வகையினிச் சொல்வாம்
குருமணி முடிபுனை குருகுலத் துதித்த
தருமனு மிளைய தம்பியர் நால்வருந்
தேவகி மைந்தன் றிருமுக நோக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிய விரத மிடையூ றின்றிப்
பண்ணிய பொழுதே பலிப்புண் டாகவுஞ்
செருவினி லெதிர்த்த செறுநரை வென்று
மருமலர்ப் புயத்தில் வாகை சூடவும்
எந்தத் தெய்வ மெவ்விர தத்தை
வந்தனை செய்யில் வருநமக் குரையெனப்
பாட்டளி துதையும் பகந்துளாய் மார்பனுங்
கேட்டருள் வீரெனக் கிளர்த்துத லுற்றான்
அக்குநீ றணியு மரன்முத லளித்தோன்
விக்கனந் தீர்க்கும் விநாயக மூர்த்தி
ஓடவைத் திடும்பொன் னொத்தொளி விளங்குங்
கோடி சூரியர்போற் குலவிய மேனியன்
கடகரி முகத்தோன் காத்திரம் பெருத்தோன்
தடவரை போலுஞ் சதுர்ப்புய முடையோன்
சர்வா பரணமுந் தரிக்கப் பட்டவன்
உறுமதிக் குழவிபோ லொருமருப் புடையோன்
ஒருகையிற் றந்தமு மொருகையிற் பாசமும்
ஒருகையின் மோதக மொருகையிற் செபஞ்செய்
உத்தம மாலையோ னுறுநினை வின்படி
சித்திசெய் வதனாற் சித்திவி நாயகன்
என்றிமை யவரும் யாவருந் துதிப்ப
நன்றித ருந்திரு நாமம் படைத்தோன்
புரவலர்க் காணப் புறப்படும் போதுஞ்
செருவினில் யுத்தஞ் செய்திடும் போதும்
வித்தியா ரம்பம் விரும்பிடும் போதும்
உத்தியோ கங்க ளுஞற்றிடும் போதும்
ஆங்கவன் றன்னை யருச்சனை புரிந்தால்
தீங்குறா தெல்லாஞ் செயமுண் டாகும்
கரதல மைந்துடைக் கணபதிக் குரிய
விரதமொன் றுளததை விரும்பிநோற் றவர்க்குச்
சந்ததி தழைத்திடுஞ் சம்பத் துண்டாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புந்தியி னினைந்த பொருள்கை கூடும்
மேலவர் தமையும் வென்றிட லாமெனத்
தேவகி மைந்தன் செப்பிடக் கேட்டு
நுவலரும் விரத நோற்றிடு மியல்பும்
புகர்முகக் கடவுளைப் பூசைசெய் விரதமும்
விரித்தெமக் குரைத்திட வேண்டுமென் றிரப்ப
வரைக்குடை கவித்தோன் வகுத்துரை செய்வான்
தேருநீ ராவணித் திங்களின் மதிவளர்
பூருவ பக்கம் புணர்ந்திடு சதுர்த்தியின்
முந்தும் புலரியின் முறைநீர் படிந்து
சந்தி வந்தனந் தவறா தியற்றி
அத்தின மதனி லைங்கரக் கடவுளைப்
பத்தியோ டர்ச்சனை பண்ணுதல் வேண்டும்
வெள்ளியாற் பொன்னால் விளங்குமங் கவன்றன்
ஒள்ளிய வருட்டிரு வுருவுண் டாக்கிப்
பூசனை புரியப் புகன்றனர் பெரியோர்
ஆசிலா மண்ணா லமைத்தலுந் தகுமால்
பூசைசெய் திடுமிடம் புனிதம தாக்கி
வாசமென் மலரின் மஞ்சரி தூக்கிக்
கோடிகங் கோசிகங் கொடுவிதா னித்து
நீடிய நூல்வளை நிறைகுடத் திருத்தி
விந்தைசேர் சித்தி விநாயக னுருவைச்
சிந்தையி னினைந்து தியானம் பண்ணி
ஆவா கனமுத லர்க்கிய பாத்தியம்
வாகா ராச மனம்வரை கொடுத்து
ஐந்தமிர் தத்தா லபிடே கித்துக்
கந்தஞ் சாத்திக் கணேசமந் திரத்தால்
ஈசுர புத்திர னெனுமந் திரத்தான்
மாசக லிரண்டு வத்திரஞ் சாத்திப்
பொருந்துமை சுதனாப் புகலுமந் திரத்தாற்
றிருந்தும் பளிதத் தீபங் கொடுத்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சறு குடனிரு பத்தொரு விதமாப்
பத்திர புட்பம் பலபல கொணர்ந்தே
உமாசுதன் கணாதிப னுயர்கரி முகத்தோன்
குமார குரவன் பாசாங் குசகரன்
ஏக தந்த னீசுர புத்திரன்
ஆகு வாகன னருடரு விநாயகன்
சர்வகா ரியமுந் தந்தருள் புரிவோன்
ஏரம்ப மூர்த்தி யென்னுநா மங்களால்
ஆரம் பத்துட னர்ச்சனை பண்ணி
மோதக மப்ப முதற்பணி காரந்
தீதகன் மாங்கனி தீங்கத லிப்பழம்
வருக்கை கபித்த மாதுளங் கனியொடு
தரித்திடு நெட்டிலைத் தாழைமுப் புடைக்காய்
பருப்புநெய் பொரிக்கறி பாறயிர் போனகம்
விருப்புள சுவைப்பொருள் மிகவுமுன் வைத்து
உருத்திரப் பிரியவென் றுரைக்குமந் திரத்தால்
நிருத்தன் மகற்கு நிவேதனங் கொடுத்து
நற்றவர் புகன்றநா னான்குப சாரமும்
மற்றவன் றிருவுள மகிழ்ந்திடச் செய்து
எண்ணுந் தகுதி யிருபிறப் பாளர்க்
குணனுறு சுவைசே ரோதன நல்கிச்
சந்தன முத்துத் தானந் தக்கிணை
அந்தணர்க் கீந்திட் டருச்சகன் றனக்குத்
திருத்தகும் விநாயகத் திருவுரு வத்தைத்
தரித்தவத் திரத்துடன் றானமாக் கொடுத்து
நைமித் திகமென நவிறரு மரபால்
இம்முறை பூசனை யாவர்செய் தாலும்
எண்ணிய கருமம் யாவையு முடிப்பர்
திண்ணிய செருவிற் செயமிகப் பெறுவர்
அரனிவன் றன்னைமுன் னர்ச்சனை பண்ணிப்
புரமொரு மூன்றும் பொடிபட வெரித்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருத்திர னிவனை யுபாசனை பண்ணி
விருத்திரா சுரனை வென்றுகொன் றிட்டான்
அகலிகை யிவன்றா ளர்ச்சனை பண்ணிப்
பகர்தருங் கணவனைப் பரிவுட னடைந்தாள்
தண்ணார் மதிமுகத் தாடம யந்தி
அன்னா ளிவனை யர்ச்சனை பண்ணி
நண்ணார் பரவு நளனைய டைந்தாள்
ஐங்கரக் கடவுளை யர்ச்சனை பண்ணி
வெங்கத நிருதரை வேரறக் களைந்து
தசரதன் மைந்தன் சீதையை யடைந்தான்
பகீரத னென்னும் பார்த்திவ னிவனை
மகிதலந் தன்னின் மலர்க்கொடர்ச் சித்து
வரநதி தன்னை வையகத் தழைத்தான்
அட்டதே வதைகளு மர்ச்சித் திவனை
அட்டபோ கத்துட னமிர்தமும் பெற்றார்
உருக்மணி யென்னு மொண்டொடி தன்னைச்
செருக்கொடு வவ்விச் சிசுபா லன்றான்
கொண்டுபோ மளவிற் குஞ்சர முகவனை
வண்டுபாண் மிழற்றா மலர்க்கொடர்ச் சித்துத்
தாரியின் மறித்தவன் றன்னைப்புறங் கண்டு
யாமுமங் கவளை யின்புறப் பெற்றோம்
புகர்முகக் கடவுளைப் பூசனை புரிந்து
மிகமிக மனத்தில் விளைந்தன பெற்றார்
இப்புவி தன்னி லெண்ணுதற் கரிதால்
அப்படி நீவிரு மவனையர்ச் சித்தால்
எப்பொருள் விரும்பி னப்பொருள் பெறுவீர்
என்றுகன் றெறிந்தோ னெடுத்திவை யுரைப்ப
அன்றுமுற் றருமனு மனுசரு மிவனைப்
பூசனை புரிந்துகட் புலனிலான் மைந்தரை
நாசனம் பண்ணி நராதிப ராகிச்
சிந்தையி னினைந்தவை செகத்தினிற் செயங்கொண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டந்தமில் செல்வத் தரசியல் பெற்றார்
ஈங்கிது நிற்க விவ்விர தத்தியல்
ஓங்கிய காதைமற் றொன்றுரை செய்வாம்
கஞ்சநான் முகன்றருங் காசிபன் புணர்ந்த
வஞ்சக மனத்தாண் மாயைதன் வயிற்றிற்
சூரனென் றொருவனுந் துணைவருந் தோன்றி
ஆர்கலி சூழ்புவி யனைத்தையு மழித்தே
சீருடைச் சுவர்க்கத் திருவளங் கெடுத்தும்
புரந்தரன் முதலிய புலவரை வருத்தியும்
நிரந்தரந் தீய நெறிநடத் துதலால்
ஆயிரங் கண்ணனு மமரரு முனிவரும்
நீயிரங் கெமக்கென நெடுங்கரங் கூப்பி
இரசத கிரியுறை யிறைவனை வணங்கி
வரமிகுஞ் சூரன் வலிமைக ளுரைக்கச்
சுடர்விடு மணிமுடிச் சூரனை வெல்லக்
கதிர்விடு வடிவேல் கரதலத் தேந்தும்
புதல்வனைத் தருவோம் போமி னீரென
அமரர் கோனுக் கரன்விடை கொடுத்துச்
சமர வேல்விழித் தையலுந் தானுங்
கூடிய கலவியற் கூடா தூடலும்
ஓடிய வானோ ரொருங்குடன் கூடிப்
பாவகன் றன்னைப் பரிவுட னழைத்துச்
சூரன் செய்யுந் துயர மெல்லாம்
ஊரர வணிந்தோற் குரையென வுரைப்பக்
காமனை யெரித்த கடவுளென் றஞ்சிப்
பாவகன் பயமுளப் பயமுனக் கேதவன்
உற்றிடுங் கரதலத் துன்னையே தரித்தான்
நெற்றியி னயனமு நீயே யாதலிற்
குற்ற மடாது கூறுநீ சென்றென
வானவர் மொழிய மற்றவன் றானுந்
தானுமச் சபையிற் றரியா தேகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமையா ளுடைய வுமையா ளுடனே
அமையா வின்பத் தமர்ந்தினி திருந்த
பள்ளி மண்டபம் பாவகன் குறுகலும்
ஒள்ளிய மடந்தை ஒதுங்கிநா ணுதலுந்
தெள்ளிதிற் பரமனுந் தேயுவைக் கண்டே
அறுமுகப் பிள்ளையை யவன்கையி லீதலும்
வறியவன் பெற்ற வான்பொருள் போலச்
சோதி நீண்முடிச் சுடரோன் கொணர்ந்து
வாத ராசன் மலர்க்கையிற் கொடுப்ப
நீதி யோடு நின்றுகை யேந்திப்
போதநீள் வாயுவும் பொறுக்கவொண் ணாமற்
றரும்புனற் கங்கை தன்கையிற் கொடுப்பத்
தரும்புனற் கங்கையுந் தாங்கவொண் ணாமற்
பொருந்திரைச் சரவணப் பொய்கையில் வைப்பத்
தண்ணார் வதனத் தாமரை யாறுங்
கண்ணா றிரண்டுங் கரமீ ராறுந்
தூணெனத் திரண்ட தோளீ ராறும்
மாயையி லாதி வான்படை யுங்கொண்
டறுமுகக் கடவுளங் கவதரித் திடலும்
மறுகிய வும்பர் மகிழ்வுடன் கூடி
அறுமீன் களைப்பா லளித்திரென் றனுப்ப
ஆங்கவர் முலையுண் டறுமுகன் றானும்
ஓங்கிய வளர்ச்சி யுற்றிடு நாளில்
விமலனு முமையும் விடையுகத் தாறு
தலைமக னிருந்த சரவணத் தடைந்து
முருகலர் குழலுமை முலைப்பா லூட்ட
இருவரு மின்பா லெடுத்தெடுத் தணைத்துத்
தேவர்தம் படைக்குச் சேனா பதியெனக்
காவல்கொண் டளிக்கக் கதிர்முடி சூட்டி
அயில்வேன் முதற்பல வாயுதங் கொடுத்துத்
திசையெலாஞ் செல்லுந் தேருமொன் றுதவிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூதப் படைகள் புடைவரப் போய்நீ
ஓதுறு மவுணரை யொறுத்திடென் றனுப்ப
இருளைப் பருகு மிரவியைப் போலத்
தகுவரென் றவரைச் சமரிடை முருக்கிக்
குருகுப் பேர்பெறுங் குன்றமுஞ் சூரன்
மருமமுந் துளைபட வடிவேல் விடுத்தே
யாவரும் வியப்புற விந்திரன் மகளாந்
தேவகுஞ் சரியைத் திருமணம் புணர்ந்திட்
டமரர் கோனுக் கமருல களித்துக்
குமர வேளுங் குவலயம் விளங்க
அமரா வதியி லமர்ந்தினி திருந்தான்
சமர வேலுடைச் சண்முகன் வடிவுகண்
டமரர் மாத ரனைவரு மயங்கி
எண்டருங் கற்பினை யிழந்தது கண்டே
அண்ட ரெல்லா மடைவுடன் கூடி
மாதொரு பாகனை வந்தடி வணங்கி
மருமலர்க் கடம்பனெம் மாநகர் புகாமல்
அருள்செய வேண்டுநீ யம்பிகா பதியென
இமையவ ருரைப்ப விறையவன் றானுங்
குமரனைக் கோபங் கொண்டுமுன் முனியக்
காவல்கொண் டெம்வினை கட்டறுத் தருளுஞ்
சேவலங் கொடியோன் றேசம் போகத்
திருந்திழை யுமையா ளருந்துய ரெய்தி
வருந்திமுன் னிற்க மங்கையைப் பார்த்து
மங்கை நீதான் வருந்துத லொழிகுதி
அங்கையாற் சூதெறிந் தாடுவோம் வாவென
வென்றதுந் தோற்றதும் விளம்புவார் யாரெனக்
குன்றமென் முலையாள் கூறிய சமயம்
புற்றர வணிந்த புனிதனைக் காணவங்
குற்றனன் றிருமா லூழ்வினை வலியாற்
சக்கிர பாணயைச் சான்றெனக் குறித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக்கதோர் சூது விருப்புட னாடச்
சாயக நேருந் தடநெடுங் கருங்கண்
நாயகி வெல்ல நாயகன் றோற்ப
இன்பவா யிதழுமை யான்வென் றேனென
எம்பெரு மானும் யான்வென் றேனென
ஒருவர்க் கொருவ ருத்தரம் பேசி
இருவருஞ் சாட்சி யிவனைக் கேட்ப
மாமனை வதைத்த மான்முக நோக்கிக்
காமனை யெரித்தோன் கட்கடை காட்ட
வென்ற நாயகி தோற்றா ளென்றுந்
தோற்ற நாயகன் வென்றா னென்றும்
ஒன்றிய பொய்க்கரி யுடனங் குரைப்பக்
கன்றிய மனத்தொடு கவுரியங் குருத்து
நோக்கிநீ யிருந்தும் நுவன்றிலை யுண்மை
வாக்கினி லொன்றாய் மனத்தினி லொன்றாய்
மைக்கரி யுரித்தோன் வதன நோக்கிப்
பொய்க்கரி யுரைத்த புன்மையி னாலே
கனலென வயிற்றிற் கடும்பசி கனற்ற
நிலமிசைக் குருட்டு நெட்டுடற் பாம்பாய்க்
கடகரி முகத்துக் கடவுள்வீற் றிருக்கும்
வடதரு நீழலிற் கிடவெனச் சபித்தாள்
முளரிகள் பூத்த முகினிறத் துருப்போய்த்
துளவணி மருமனுந் துணைவிழி யிழந்தே
ஆண்டரைக் கணத்தி லாயிரம் யோசனை
நீண்டபைப் பாந்த ணெட்டுட லெடுத்து
வளர்மருப் பொன்றுடை வள்ளல்வீற் றிருக்குங்
கிளர்ச்சினை யாலின் கீழ்க்கிடந் தனனால்
திரிகடக் கரியின் றிருமுகக் கடவுளும்
வழிபடு மடியார் வல்வினை தீர்த்தே
எழில்பெறு வடமரத் தின்கீ ழிருந்தான்
கம்பமா முகத்துக் கடவுடன் பெருமையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்புவி யோருக் கறிவிப் போமென
உம்பரு லகத் தோரெழு கன்னியர்
தம்பநூ லேணியிற் றாரணி வந்தே
கரிமுகக் கடவுளைக் கைதொழு தேத்திக்
கார்த்திகைக் கார்த்திகை கழிந்தபின் னாளில்
ஆர்த்த கலிங்கத் தணியிழை வாங்கி
இருபத் தோரிழை யின்புறக் கட்டி
ஒருபோ துண்டி யுண்டொரு மனமாய்
வேதத் தாதியும் பூமியி லெழுத்தும்
ஆதிவி நாயகற் கானவெ ழுத்தும்
மூன்றெழுத் ததனான் மொழிந்த மந்திரமும்
தேன்றருங் குழலியர் சிந்தையுட் செபித்தே
உரைதரு பதினா றுபசா ரத்தால்
வரைமகண் மதலையை வழிபாடாற்றி
இருபது நாளு மிப்படி நோற்று
மற்றைநா ளைங்கர மாமுகன் பிறந்த
தற்றைநாட் சதயமு மாறாம் பக்கமுஞ்
சேருமத் தினத்திற் றெளிபுன லாடி
வாரண முகத்தோன் வருபெருங் கோயில்
சீர்பெற மெழுகித் திருவிளக் கேற்றிக்
குலவுபொற் கலைகள் கொடுவிதா னித்து
மலர்பல தொடுத்திடு மாலைக ளாற்றிக்
கொலைபுரி வடிவேற் குகற்குமுன் வருகை
மலைமுகக் கடவுளை மஞ்சன மாட்டிப்
பொற்கலை நன்னூற் பூந்துகில் சாத்திச்
சொற்பெறு சந்தனச் சுகந்தம் பூசிச்
செருந்தி சண்பகஞ் செங்கழு நீரொடு
குருந்து மல்லிகை கோங்கொடு பிச்சி
கருமுகை புன்னை கடிகமழ் பாதிரி
மருவிரி ஞாழன் மகிழிரு வாட்சி
தாமரை முல்லை தழையவிழ் கொன்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமலர் நொச்சி பூத்தமைக் குவளை
காந்த ளாத்தி கடம்புசெவ் வந்தி
வாய்ந்தநல் லெருக்கு மலர்க்கர வீரம்
பச்சிலை நொச்சி படர்கொடி யறுகு
முத்தலைக் கூவிள முதலிய சாத்தித்
தூபதீ பங்கள் சுகம்பெறக் கொடுத்தே
அப்ப மோதக மவலெள் ளுண்டை
முப்பழந் தேங்காய் முதிர்மொழிக் கரும்பு
சீனிதேன் சர்க்கரை செவ்விள நீருடன்
பானறு நெய்தயிர் பருப்புடன் போனகங்
கற்பகக் கடவுள் களித்திடத் திருமுன்
பொற்புறப் படைத்துப் பூசனை பண்ணி
நோற்பது கண்டு நோலா திருந்த
பாப்புரு வாகிய பஞ்சா யுதனும்
யாப்புறு கொங்கையீர் யானுநோற் பேனென
ஆங்கவன் றனக்கும் வேண்டுவ தளித்துப்
பாங்கொடிவ் விரதம் பரிந்துநோற் பித்தார்
அண்டர்நா யகனா மைங்கர னருளால்
விண்டீவும் பணடுள வேடம் பெற்றே
உஞ்சைமா நகர்புகுந் துமையொடு விமலன்
கஞ்சநாண் மலர்ப்பதங் கைதொழு திடலும்
பஞ்சிமென் சீறடிப் பார்ப்பதி நெஞ்சின்
வெஞ்சின மிகுந்து விமலனை நோக்கி
யானிடுஞ் சாப நீங்கிய தேனென
மானெடுங் கண்ணி மணிக்கத வடைப்ப
இறையவ னிதற்குக் காரண மேதென
மறிகடற் றுயிலு மாயவ னுரைப்பான்
பிறைமருப் பொன்றுடைப் பிள்ளையன் றெனக்குத்
தந்தருள் புரிந்த தவப்பய னீதெனச்
சிந்தை மகிழ்ந்து தேவர் தேவனும்
பூங்கொடி யடைத்த பொற்றாழ் நீங்கச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாங்குமுன் னுரைத்த சக்கிர பாணி
இக்கதை சொல்ல வக்கணி சடையனும்
மிக்கநல் விரதம் விருப்புட னோற்றபின்
மாதுமை யடைத்த வன்றாழ் நீக்கி
நாதனை நணுகிட நம்பனு நகைத்தான்
நானோ வந்து நகையா னதுவெனத்
தேனேர் மொழியா டெளியக் கூறென
நன்மதி நுதலாய் நானிலந் தன்னில்
உன்மக னோன்பி னுறுதி யறிந்து
சிந்தை மகிழ்ந்து சிரித்தேன் யானென
அந்தமி லரனை யாயிழை வணங்கிப்
பொருஞ்சூ ரறவேல் போக்கிய குமரன்
வரும்படி யானும் வருந்திநோற் பேனென
இறைவன் கதைசொல வேந்திழை நோற்றபின்
குறமட மகளைக் குலமணம் புணர்ந்தோன்
சுடர்வடி வேலோன் றொல்வினை தீர்ந்து
தாதுமை வண்டுழுந் தாமத் தாமனை
மாதுமை யாளை வந்துகண் டனனே
கண்ணநீ கண்ணிலாக் கட்செவி யாகெனத்
தண்ணறங் குழலுமை சாபமிட் டதுவும்
அக்குநீ றணியும் அரன்முத லளித்த
விக்கின விநாயகன் விரதநோற் றதன்பின்
சுடர்க்கதை யேந்துந் துளவ மாலையன்
விடப்பணி யுருவம் விட்டுநீங் கியதும்
பரிவுகொள் கூத்துடைப் பரமனு நோற்றுக்
கவுரியன் றடைத்த கபாடந் திறந்ததும்
வாசமென் குழலுடை மாதுமை நோற்பத்
தேசம் போகிய செவ்வேள் வந்ததும்
வானவர் நோற்று வரங்கள் பெற்றதும்
நாரத முனிவ னவின்றிடக் கேட்டே
இந்நிலந் தன்னி லிவ்விர தத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னவன் வச்சிர மாலிமுன் னோற்றுக்
காயத் தெழுந்த கடும்பிணி தீர்ந்து
மாயிரும் புவியின் மன்னனாய் வாழ்ந்து
தடமுலைத் திலோத்தமை தனைமணம் புணர்ந்து
மழவிடை போற்பல மைந்தரைப் பெற்றுக்
கடைமுறை வெள்ளியங் கைலையி னுற்றான்
பரிவொடிவ் விரதம் பாரகந் தன்னில்
விரைகமழ் நறுந்தார் விக்கிரமா தித்தன்
மறிகடற் புவிபெற வருந்திநோற் றிடுநாள்
மற்றவன் காதன் மடவர லொருத்தி
இற்றிடு மிடையா ளிலக்கண சுந்தரி
மெத்தவன் புடனிவ் விரதநோற் பேனென
அத்தந் தன்னி லணியிழை செறித்துச்
சித்த மகிழ்ந்து சிலநா ணோற்றபின்
உற்ற நோன்பி னுறுதி மறந்து
கட்டிய விழையைக் காரிகை யவிழ்த்து
வற்றிய கொவ்வையின் மாடே போட
ஆங்கது தழைத்தே யலருந் தளிருமாய்ப்
பாங்குற வோங்கிப் படர்வது கண்டு
வேப்பஞ் சேரியிற் பேராய்ச்சிறை யிருந்த
பூப்பயில் குழல்சேர் பொற்றொடி யொருத்தி
அவ்விய மில்லா ளவ்விடந் தன்னிற்
கொவ்வை யடகு கொய்வாள் குறுகி
இழையது கிடப்பக் கண்டவ ளெடுத்துக்
குழைதவழ் வரிவிழிக் கோதையைக் கட்டி
அப்பமோ டடைக்கா யவைபல வைத்துச்
செப்ப முடனே திருந்திழை நோற்றிடக்
கரிமுகத் தண்ணல் கருணை கூர்ந்து
பண்டையி லிரட்டி பதமவட் கருளக்
கொண்டுபோ யரசனுங் கோயிலுள் வைத்தான்
விக்கிரமா தித்தன் விழிதுயில் கொள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உக்கிர மான வுடைமணி கட்டித்
தண்டையுஞ் சிலம்புந் தாளினின் றொலிப்பக்
கொண்டல் போல்வருங் குஞ்சர முகத்தோன்
மனமிகக் கலங்கு மன்னவன் றன்னிடங்
கனவினில் வந்து காரண மாக
இலக்கண சுந்தரி யிம்மனை யிருக்கிற்
கலக்கம் வந்திடுங் கழித்திடு புறத்தெனத்
துண்ணென வெழுந்து துணைவியை நோக்கிக்
கண்ணுறக் கண்ட கனவின் காரணம்
அண்ண லுரைத்திடு மவ்வழி தன்னில்
ஆனை குதிரை யவைபல முடிவுற
மாநகர் கேடுறும் வகையது கண்டு
இமைப்பொழு திவளிங் கிருக்கலா காதென
அயற்கடை யவனு மகற்றிய பின்னர்
வணிகன் றனது மனைபுகுந் திருப்ப
மணியு முத்தும் வலியகல் லாய்விட
அணியிழை தன்னை யவனு மகற்ற
உழவர் தம் மனையி லுற்றவ ளிருப்ப
வளர்பயி ரழிந்து வளம்பல குன்ற
அயன்மனை யவரு மகற்றிய பின்னர்க்
குயவன் மனையிற் கோற்றொடி செல்லக்
குயக்கல முடைந்து கொள்ளை போக
அயற்கடை யவனு மகற்றிய பின்னர்த்
தூசுதூய் தாக்குந் தொழிலோர் மனைபுகத்
தூசுக ளெல்லாம் துணிந்துவே றாகத்
தூசரு மவளைத் தூரஞ் செய்ய
மாலைக் காரன் வளமனை புகலும்
மாலை பாம்பாம் வகையது கண்டு
ஞால மெல்லா நடுங்கவந் துதித்தாய்
சாலவும் பாவிநீ தான்யா ரென்ன
வெம்மன மிகவு மேவி முனிவுறா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மனை யவனு மகற்றிய பின்னர்
அவ்வை தன்மனை அவள்புகுந் திருப்ப
அவ்வை செல்ல அகங்க டோறும்
வைதன ரெறிந்தனர் மறியத் தள்ளினர்
கைகொடு குற்றினர் கண்டோர் பழித்தனர்
அவ்வை மீண்டுதன் னகமதிற் சென்று
இவ்வகைக் கன்னிநீ யாரென வினாவக்
காத்தாண் டுலகு கருணையோ டாண்ட
மார்த்தாண்ட ராசன் மாமக ளொருத்தி
எல்லார்க்கு மூத்தா ளிலக்கண சுந்தரி
சொல்லுவிக் கிரம சூரியன் மனையெனச்
சீர்கெட விருந்த தெரிவையை நோக்கி
நீரது கொண்டு நிலமெழு கிடுகெனச்
சாணி யெடுக்கத் தையலுஞ் சென்றாள்
சாணியு முழுத்துத் தண்ணீர் வற்றிப்
பேணிய புழுவாய்ப் பெரிது தோன்ற
மானோர் விழியாள் வருந்துதல் கண்டு
தானே சென்று சாணி யெடுத்துத்
தண்ணீர் கொணர்ந்து தரைமெழுக் கிட்டு
மண்ணிய வீட்டின் மணிவிளக் கேற்றிப்
புத்தக மெடுத்து வாவெனப் புகலப்
புத்தகம் பாம்பாய்ப் பொருந்திநின் றாட
மெத்தவுண் ணடுங்கி வீழ்ந்தவள் கிடப்பக்
கொவ்வையங் கனிவாய்க் கோதையை விலக்கி
அவ்வை தானே யகமதிற் சென்று
புத்தக மெடுத்துப் பொருந்தப் பார்த்து
வித்தக நம்பி விநாயக மூர்த்தி
கற்பகப் பிள்ளைசெய் காரிய மிதுவென
உத்தமி யவ்வை யுணர்ந்துமுன் னறிந்து
தவநெறி பிழைத்த தையலை நோக்கி
நுவலரும் விநாயக நோன்புநோற் றிடுகெனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரத்துமூ வேழிழைக் காப்புக் கட்டி
அப்பமு மவலு மாம்பல பண்டமுஞ்
செப்பம தாகத் திருமுன் வைத்தே
அவ்வை கதைசொல ஆயிழை கேட்டு
மத்தகக் களிற்றின் மகாவிர தத்தை
வித்தக மாக விளங்கிழை நோற்றுக்
கற்பக நம்பி கருணைபெற் றதற்பின்
சக்கிர வாள சைனியத் தோடு
விக்கிரமா தித்தன் வேட்டையிற் சென்று
தானுஞ் சேனையுந் தண்ணீர் விரும்பி
எவ்வகை செய்வோ மெனவுள மெலிந்தே
அவ்வை தன்மனை யங்கவ ரணுக
எய்துந் தாகமு மிளைப்புங் கண்டு
செவ்வே யவற்றைத் தீர்க்க வெண்ணி
இலக்கண சுந்தரி யென்பவ டன்னை
அப்பமு நீரு மரசற் கருளெனச்
செப்பிய வன்னை திருமொழிப் படியே
உண்ணீர்க் கரகமு மொருபணி காரமும்
பண்ணேர் மொழியாள் பார்த்திபற் குதவ
ஒப்பறு படையு முயர்படை வேந்தனும்
அப்பசி தீர அருந்திய பின்னர்
ஆனை குதிரை யவைகளு முண்டுந்
தானது தொலையாத் தன்மையைக் கண்டே
இவ்வகை சமைத்தநீ யாரென வினவ
மவ்வலங் குழலாள் மௌனமாய் நிற்ப
அவ்வை தான்சென் றரசர்க் குரைப்பாள்
கணபதி நோன்பின் காரணங் காணிது
குணமுடை யிவளுன் குலமனை யாட்டி
இலக்கண சுந்தரி யென்றவ்வை கூற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கையை நோக்கி மனமிக மகிழ்ந்து
திங்கணோர் வெள்ளிச் சிவிகையி னேற்றிக்
கொண்டூர் புகுந்தான் கொற்ற வேந்தனும்
ஒண்டொடி யாரி லுயாபத முதவினன்
சிந்துர நுதலார் சென்றடி பணியச்
சுந்தரி யிருந்தாள் சுகத்துடன் மகிழ்ந்தே.

## நூற்பயன்

பொன்னுமிகும் கல்விமிகும் புத்திரரோ டெப்பொருளும்
மன்னு நவமணியும் வந்தணுகும் – உன்னி
ஒருக்கொம்பின் யானைமுக வுத்தமனார் நோன்பின்
றிருக்கதையைக் கேட்கச் சிறந்து.

பொற்பனைக்கை முக்கட் புகர்முகத்துப் பொன்மவுலிக்
கற்பகத்தி நோன்பின் கதைதன்னைச் – சொற்பெருகக்
கற்றவரு நோற்றவருங் காதலித்துக் கேட்டவரும்
பெற்றிடுவர் கற்பகத்தின் பேறு.

வெள்ளை யெருதேறும் விரிசடையோன் பெற்றெடுத்த
பிள்ளையார் நோன்பின் பெருங்கதையை – உள்ளபடி
நோற்றார் மிகவாழ்வர் நோவா தருகிருந்து
கேட்டோர்க்கும் வாராது கேடு.

சூலிலார் நோற்கிற் சுதரை மிகப்பெறுவார்
சாலமிகும் வெங்கலியார் தானோற்கில் – மேலைப்
பிறப்பொல்லா நல்ல பெருஞ்செல்வ மெய்திச்
சிறப்பிலே வாழ்வார் சிறந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்



**திருச்சிற்றம்பலம்**

**"தொல்லை யிரும்பிறவி சூழுந் தளைநீக்கி**
**அல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை**
**மருமா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்**
**திருவாசக மென்னுந் தேன்".**

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணி தன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க

வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன் தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க
கரம் குவிவார் உள் மகிழும் கோன் கழல்கள் வெல்க
சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க

ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி

ஆராத இன்பம் அருளும் மலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவ புராணம் தன்னை
முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண் நுதலான் தன் கருணைக்கண் காட்ட வந்து எய்தி
எண்ணுதற்கு எட்டா எழில் ஆர்கழல் இறைஞ்சி
விண் நிறைந்தும் மண் நிறைந்தும் மிக்காய், விளங்கு ஒளியாய்,
எண் இறந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழும் ஆறு ஒன்று அறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன், எம்பெருமான்
மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே.

வெய்யாய், தணியாய், இயமானனாம் விமலா
பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெய் ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச் சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே.

ஆக்கம் அளவு இறுதி இல்லாய், அனைத்து உலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய், அருள் தருள்வாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய், சேயாய், நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்து அடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்து உடையாய், விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய், எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டி
புறம்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி,
மலம் சோரும் ஒன்பது வாயில் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய,

விலங்கு மனத்தால், விமலா உனக்கு
கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம் தன்மேல் வந்து அருளி நீள்கழல்கள் காட்டி,
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயா ஆன தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன் ஆர்அமுதே சிவபுரனே
பாசமாம் பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய் ஞானத்தால் கொண்டு உணர்வார் தம்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கு அரிய நுண் உணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் என் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்று இன்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தை உள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்கு உடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்று என்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய் ஆனார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டு அழிக்க வல்லானே
நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே
தில்லை உள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலிங்காஷ்டகம்



ப்ரஹ்ம முராரி ஸ•ரார்சித லிங்கம்
நிர்மலா பாஸித ஸோபித லிங்கம்
ஜன்மத துக்க வினாசக லிங்கம்
தத் ப்ரணமாமி சதாசிவ லிங்கம்

தேவ முனி ப்ரவரார்சித லிங்கம்
காம தஹங் கருணாகர லிங்கம்
ராவண தர்ப வினாஷன லிங்கம்
தத் ப்ரணமாமி சதாசிவ லிங்கம்

ஸர்வ ஸ•கந்த ஸ•லேபித லிங்கம்
புத்தி விவர்த்தன காரண லிங்கம்
சித்த சுராசுர வந்தித லிங்கம்
தத் ப்ரணமாமி சதாசிவ லிங்கம்

கனக மஹாமணி பூஷித லிங்கம்
பணிபதி வேஷ்டித ஸோபித லிங்கம்
தக்ஷ ஸ•யக்ஞ விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி சதாசிவ லிங்கம்

குங்கும சந்தன லேபித லிங்கம்
பங்கஜ ஹார ஸ•ஸோபித லிங்கம்
ஸஞ்சித பாப விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி சதாசிவ லிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவ கணார்ச்சித ஸேவித லிங்கம்
பாவைர் பக்தி ப்ரவேசக லிங்கம்
தினகர கோடி பிரபாகர லிங்கம்
தத் ப்ரணமாமி சதாசிவ லிங்கம்

அஷ்ட தளோபரி வேஷ்டித லிங்கம்
ஸர்வ ஸமுத்பவ காரண லிங்கம்
அஷ்ட தரித்ர விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி சதாசிவ லிங்கம்

ஸுரகுரு ஸுரவர பூஜித லிங்கம்
ஸுரவன புஷ்ப சதார்சித லிங்கம்
பராத்பரம் பரமாத்மக லிங்கம்
தத் ப்ரணமாமி சதாசிவ லிங்கம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கௌரி காப்பு

### விநாயகர் காப்பு

முன்னின்று செய்யுள் முறையாகப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்
எக்குற்றமும் வாராமற் கா.

### வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியாரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிருக்குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்கு தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடியமகி சாசுரனை கூறு போட்டவளே
அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைந்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைந்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைந்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தை கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையை தந்துவிடு வையத்தில் வாழவிடு
காளி மகாதேவியாரே காப்பருளும் தேவியாரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவன்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே நற்காப்பு அருளும்மா
பிள்ளை அற்றவர்க்கு பெருங்காப்பு அருளும்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கு கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடை தலைவியாரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியாரே எல்லாமிகு வல்லமையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாரும்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்கு தாறேம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தாள் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதில்மாற்றி விட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியாரே
காப்பெனக்கு போட்டுவிட்டாள் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்து வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்து வரும்
சந்தெனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொளுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிஞ்சதென்று
ஏப்பம் மிகவிடு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுங்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச்
செய்திடுவேன் ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற்
கனன்றிடுவேன் தீமைச் செயலெதும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
கொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிருந்து
பக்தி மனத்துடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சக்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே அச்சக்தி
எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருஞானசம்பந்தர் அருளிய

# திருநீற்றுப் பதிகம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன்திரு ஆலவாயான் திருநீறே.

வேதத்தில் உள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந்தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையிலுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்ததிரு ஆலவாயான் திருநீறே

முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருஆல வாயான் திருநீறே.

காண இனியதுநீறு கவினை் தருது நீறுஆலவா
பேணி அணிபவர்க்கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மரணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவதுநீறு திரு ஆலவாயான் திருநீறே.

பூச இனியது நீறு புண்ணியமாவது நீறு
பேச இனியது நீறு பெருந்தவத் தேவர்களுக்கெல்லாம்
ஆசை கொடுப்பது நீறு அந்தம மாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருஆலவாயான் திருநீறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருத்தம தாவது நீறு அவலம் அறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்ததிரு ஆலவாயான் திருநீறே.

எயிலது அட்டது நீறு இருமைக்கும் உள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
ஆயிலைப் பொலிதரு சூலத்தாலவாயான் திருநீறே.

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவதுநீறு
பராவண மாவது நீறு பாவம் அறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அரா வணங்குந் திருமேனி ஆலவாயான் திருநீறே.

மாலொ டயனறியாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏல உடம்பிடர் தீர்க்கும் இன்பந் தருவது நீறு
ஆலமதுண்ட மிடற்றெம் ஆலவாயான் திருநீறே.

குணடிகைக் கையர்களோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண்டிகைப் பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்டிசைப் பட்டபொருளாளர் ஏத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேந்தும் திருவாலவாயான் திருநீறே.

ஆற்றல் அடல்விடை யேறும் ஆலவாயான் திருநீற்றை
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞான சம"பந்தன்
தேற்றித் தென்னன் உடலுற்ற தீப்பிணி யாயினதீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.

**திருச்சிற்றம்பலம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோளாறு பதிகம்

## சம்பந்தர் அருளியது

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 1

என்பொடு கொம்பொடாமை இவைமார் பிலங்க
எருதேறி ஏழை யுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றொடேழு பதினெட்டொ டாறும்
உடனாய் நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 2

உருவளர் பவள மேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொண்றைதிங்கள் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசைதெய்வ மான பலவும்
அறநெறி நல்லநல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிநுதல் மங்கையோடு வடபால் இருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றை மாலை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலன்அங்கி நமனோடு தூதர்
கொடுநோய்கள் ஆன பலவும்
அதிகுணம் நல்லநல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 4

நஞ்சணி கண்டன்எந்தை மடவாள் தனோடும்
விடையேறும் நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுண ரோடும் உரும்இடியும் மின்னும்
மிகையான பூதம் அவையும்
அஞ்சிடு நல்லநல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 5

வாள்வரி அதள தாடை வரிகோ வணத்தர்
மடவாள் தனோடும் உடனாய்
நாள்மலர் வன்னி கொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்பிள முலைநன் மங்கைஒரு பாகமாக
விடையேறு செல்வன் அடைவார்
ஒப்பிள மதியும்அப்பும் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும் வாதம் மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 7

வேள்பட விழிசெய்தன்று விடைமேல் இருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வாள்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழ்இலங்கை அரையன் தனோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 8


பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமக ளோடெருக்கு முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனும்மாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேருநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொத்தலர் குழலியோடு விசயற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமும் மதியும்நாகம் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
புத்தரோ டமணைவாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 10

தேனமர் பொழில்கொள்ஆலை விளைசெந்நெல் துன்னி
வளர்செம்பொன் எங்கும் திகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
நானுறு கோளும்நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலைஓதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே. 11





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரணமாயிரம்

வாரண மாயிரம் சூழவலம் செய்து,
நாரண நம்பி நடக்கின்றானென் றெதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புறமெங்கும்
தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழீநான் 1

நாளை வதுவை மணமென்று நாளிட்டு
பாளை கமுகு பரிசுடைப் பந்தற்கீழ்
கோளரி மாதவன் கோவிந்த னென்பான்
ஓர்காளை புகுதக் கனாக்கண்டேன் தோழீநான் 2

இந்திர னுள்ளிட்ட தேவர் குழாமெல்லாம்
வந்திருந் தென்னை மகட்பேசி மந்திரித்து
மந்திரக் கோடியுடுத்தி மணமாலை
அந்தரி சூட்டக் கனாக்கண்டேன் தோழீநான் 3

நாற்றிசைத் தீர்த்தங் கொணர்ந்து நனிநல்கி
பார்ப்பனச் சிட்டர்கள் பல்லா ரெடுத்தேத்தி
பூப்புனை கண்ணிப் புனிதனோ டென்றன்னை
காப்புநான் கட்டக் கனாக்கண்டேன் தோழீநான். 4

கதிரொளி தீபம் கலசமுடனேந்தி
சதிரிள மங்கையர் தாம் வந் தெதிர் கொள்ள
மதுரையார் மன்ன னடி நிலை தொட்டு
எங்கும் அதிரப் புகுதக் கனாக்கண்டேன் தோழீநான் 5

மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாம நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்து
என்னைக் கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீநான் 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்நல் லார்நல்ல மறையோதி மந்திரத்தால்
பாசிலை நாணல் படுத்துப் பரிதிவைத்து
காய்சின மாகளி றன்னானென் கைப்பற்றி,
தீவலம் செய்யக் கனாக்கண்டேன் தோழீநான் 7

இம்மைக்கு மேழேழ் பிறவிக்கும் பற்றாவான்
நம்மை யுடையவன் நாராயணன் நம்பி
செம்மை யுடைய திருக்கையால் தாள் பற்றி
அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன் தோழீநான். 8

வரிசிலை வாள்முகத் தென்னைமார்
தாம்வந்திட்டு எரிமுகம் பாரித் தென்னை முன்னே நிறுத்தி
அரிமுக னச்சுதன் கைம்மேலேன் கைவைத்து
பொரி முகந் தட்டக் கனாக்கண்டேன் தோழீநான் 9

குங்கும மப்பிக் குளிர்சாந்தம் மட்டித்து
மங்கல வீதிவலம் செய்து மணநீர்
அங்கவனோடு முடஞ்சென்றங் கானைமேல்
மஞ்சன மாட்டக் கனாக்கண்டேன் தோழீநான் 10

ஆயனுக் காகத்தான் கண்ட கனாவினை
வேயர் புகழ்வில்லி புத்தூர்க்கோன் கோதைசொல்
தூய தமிழ்மாலை ஈரைந்தும் வல்லவர்
வாயுநன் மக்களைப் பெற்று மகிழ்வரே 11

வாரணமாயிரம் எனும் இப்பகுதி நாச்சிமார் திருமொழியில் ஆறாவதாக உள்ளது. திருமண காலத்தில் பச்சை பூசுதல் எனும் நிகழ்ச்சியில் இப்பகுதி பாடல்களை பாடுவதால் மணமக்களின் வாழ்க்கை இனிக்கும் என்பர் ஆன்றோர். மாயவனை மணந்து மகிழ்ந்தமை போல் தாம் கண்ட கனா நிகழ்ச்சியை ஸ்ரீ ஆண்டாள் இப்பகுதியில் பாடியுள்ளார். திருமணம் நடைபெற மகளிர் இப்பகுதியை ஒரு மனதுடன் படித்து, ஆண்டாளின் திருவடிகளை துதித்தால் அவர்களுக்கு விரைவில் திருமணம் நிகழ்வதோடு நல்ல குழந்தை பாக்கியமும் கிட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த
# பெரிய திருமொழி முதற்பத்து

வாடினேன் வாடிவருந்தினேன் மனத்தால்
பெருந்துயரிடும்பையில் பிறந்து
கூடினேன் கூடியிளையவர்த் தம்மோடு
அவர்த்தரும் கலவியே கருதி
ஓடினேன் ஓடியுய்வதோர்ப் பொருளால்
உணவெனும் பெரும் பதம் திரிந்து
நாடினேன் நாடி நான் கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்

ஆவியே அமுதே என நினைந்துருகி
அவரவர்ப்பணை முலை துணையா
பாவியேனுணரா தெத்தனை பகலும்
பழுதுபோயொழிந்தன நாள்கள்
தூவிசேரன்னம் துணையொடும்புணரும்
சூழ்புனற் குடந்தையேதொழுது
என்நாவினாலுய்யநான் கண்டுகொண்டேன்
நாராயணாவென்னும் நாமம்

சேமமேவேண்டித் தீவினை பெருக்கித்
தெரிவை மாருருவமே மருவி
ஊமனார் கண்ட  கனவிலும் பழுதாய்
ஒழிந்தன கழிந்த ஷவந் நாள்கள்
காமனார் தாதை நம்முடையடிகள்
தம்மடைந்தார் மனத்திருப்பார்
நாமம் நானுய்ய நான்கண்டு கொண்டேன்
நாராயணாவென்னும் நாமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென்றியே வேண்டி வீழ்பொருட் கிரங்கி
வேற்கணார் கலவியே கருதி
நின்றவா நில்லா நெஞ்சினையுடையேன்
என் செய்கேன் நெடுவிசும்பணவும்
பன்றியா யன்றுபாரகங் கீண்ட
பாழியா னாழியானருளே
நன்று நானுய்ய நான்கண்டு கொண்டேன்
நாராயணாவென்னும் நாமம்

கள்வனேனானேன் படிறு செய்திருப்பேன்
கண்டவா திரிதந்தேனேலும்
தெள்ளியேனானேன் செல்கதிக்கமைந்தேன்
சிக்கெனத் திருவருள் பெற்றேன்
உள்ளெலாமுருகிக் குரல் தழுத்தொழிந்தேன்
உடம்பெலாம் கண்ணநீர்சோர
நள்ளிருளளவும் பகலும் நானுழைப்பவன்
நாராயணா வென்னும் நாமம்.

எம்பிரான் எந்தை என்னுடைச்சுற்றம்
எனக்கரசு என்னுடைவாணாள்
அம்பினால் அரக்கர் வெருக்கொள நெருக்கி
அவருயிர்செகுத்த வெம்மண்ணல்
வம்புலாஞ் சோலைமாமதிள் தஞ்சை
மாமணிக்கோயிலே வணங்கி
நம்பிகாள் உய்ய நான் கண்டு கொண்டேன்
நாராயணாவென்னும் நாமம்

இற்பிறப்பறியீர் இவரவரென்னீர்
இன்னதோர்த் தன்மை யென்றுணரீர்
கற்பகம் புலவர்களைகணென் றூலகில்
கண்டவா தொண்டரைப்பாடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்புருளாளீர் சொல்லுகேன் வம்மின்
சூழ்புனற்குடந்தையே தொழுமின்
நற்பொருள்காண்மின் பாடி நீருய்ம்மின்
நாராயணா வென்னும் நாமம்

கற்றிலேன் கலைகள் ஐம்புலன் கருதும்
கருத்துளே திருத்தினேன் மனத்தை
பெற்றிலேன் அதனால் பேதையேன்
நன்மை பெருநிலத்தருருயிர்க் கெல்லாம்
செற்றமே வேண்டித் திரிதருவேன் தவிர்ந்தேன்
செல்கதிக்குய்யுமா றெண்ணி
நற்றுணையாகப் பற்றினேன் அடியேன்
நாராயணாவென்னும் நாமம்

குலம் தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுயராயினவெல்லம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும்பருளும்
அருளொடு பெருநிலமளிக்கும்
வலந்தரும் மற்றுந்தந்திடும் பெற்ற
தாயினுமாயின செய்யும்
நலந்தருஞ் சொல்லை நான் கண்டுகொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்

மஞ்சுலாஞ் சோலை வண்டறை மாநீர்
மங்கையார்வாள் கலிகன்றி
செஞ்சொலாலெடுத்த தெய்வ நன்மாலை
இவைகொண்டு சிக்கெனத் தொண்டீர்
துஞ்சும்போது அழைமின் துயர்வரில்நினைமின்
துயரிலீர் சொல்லிலும் நன்றாம்
நஞ்சுதான் கண்டீர் நம்முடை வினைக்கு
நாராயணாவென்னும் நாமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதோஷ நோன்பு

சிவபெருமானைக் குறித்து அனுட்டிக்கும் பிரதான விரதங்களுள் பிரதோஷமும் ஒன்றாகும். பிரதோஷம் என்னும் பெயர் மாலைக் காலம் என்னும் பொருள் தாங்கி நிற்பது. அதனால் மாலைக் காலத்தில் அனுட்டிக்கும் விரதம் என்பது தெற்றெனப் புலனாகும்.

பிற்பகல் நாலரை மணியிலிருந்து இரவு ஏழரை மணிக்கு இடைப்பட்ட வேளை பிரதோஷகாலம் எனப்படும்.

பாற்கடலில் தோற்றிய ஆலத்தைக் கண்டு அஞ்சிய அமரர்கள் அடைக்கலம் நாடி கயிலைக்கு ஓடினார்கள். அச்சு மேலீட்டினால் கைலாசபதியின் கழல்களைக் காண இடம் வலமாக அல்லோல கல்லோலப்பட்டனர்.

தேவர்களுடைய இடையூற்றை நீக்க இறைவன் ஆலமே அமுதாவுண்டராயினார். சனத்திரள் எங்கும் மிகுந்ததால் சிவபெருமான் இடப தேவருடைய கொம்புகளுக்கிடையில் நின்று நர்த்தனம் புரிந்தருளினார் அக்காலம் திரயோதசியாகும்.

வளர்பிறைத் திரயோதசியும் சனிக்கிழமையும் பொருந்திய நாளில் அச்சம்பவம் நிகழப் பெற்றதனால் சனிப்பிரதோஷம் சிறப்பாக அனுட்டிக்கப் பெறுகின்றது.

பிரதோஷ நோன்பை பேணுபவர்கள் பகற்கால உணவினைத் துறக்க வேண்டும் மாலைக் காலத்தில் சிவ சிந்தனையோடு சிவாலயம் சென்று சிவபூசை வழிபாட்டில் ஈடுபடல் வேண்டும். பிரதோஷ காலத்தில் சிவாலய வலம் வரல் சிறப்பு அம்சமாகும்.

இடபதேவரை முதலில் வணங்கி அங்கிருந்து இடப் பக்கமாகச் சென்று சண்டேசுவரரைத் தரிசனம் பண்ணல் வேண்டும். பின்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன வழியே திரும்பி வந்து மீண்டும் இடபதேவரை வணங்கி வலமாகச் சென்று கோமுகவரை ஏகல் வேண்டும். மீண்டும் திரும்பி வந்து இடபதேவரை வணங்க வேண்டும். திரும்பவும் கோமுகை வரை செல்ல வேண்டும். இடபதேவரை வணங்காமல் சென்று திரும்பி இடபதேவரைத் தரிசனம் பண்ணாமல் சென்று சண்டேசுவரரைத் தரிசனம் பண்ணி பின்பு இடபதேவருடைய இரண்டு கொம்புகளின் நடுவாகச் சிவலிங்கப் பெருமானைத் தரிசித்து பிரணவத்துடன் "ஹரஹர"என்று பிரார்த்தனை பண்ணி வணங்குதல் வேண்டும்.

இவ்வாறு சிவ தரிசனத்திற்குப் பின்னர் இல்லம் சென்று பக்தர்களோடு போசனம் செய்க தரிசனத்திற்குப் பின்பு காப்பரிசி எடுத்தல் வேண்டும்.

**காப்பரிசி :-** பச்சையரிசியையும் பயற்றம் பருப்பையும் நீரில் ஊற வைத்து சர்க்கரையையும் தேங்காய்த் துருவலையும் கலந்து குழைத்தெடுத்தல்.

பிரதோஷ காலத்தில் எண்ணெய் தேய்த்தல், குளித்தல், போசனம் செய்தல், உறங்குதல் முதலியன விலக்கப்பட்டவை ஆகும்.

ஓராண்டு காலத்தில் உத்தியாபனம் செய்யலாம். விரும்பின் தொடர்ந்தும் விரதத்தை மேற்கொள்ளலாம். அமாவாசை, பூரணையைத் தொடர்ந்து வரும் பதின்மூன்றாவது நாளில் பிரதோஷ விரதம் அனுஷ்டிக்கப்படும்.

பிரதோஷ விரதத்தைப் பேணி வருவதால் புத்திர பாக்கியம் கைகூடும், நோய் நீங்கும், வறுமை அகலும், கடன் நீங்கும் மன இட்ட சித்தி தரும், பழி பாவம் அகலும், சிவ அன்பு மேலிடும். இவை போல்வன அனேக நலம் தரும்.

*அன்பே சிவம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித வாழ்வில் மரணக் கிரியைகள்

## அந்தியேட்டி

ஒரு கல்லை வைத்து இறந்தவரின் ஆத்மாவை மந்திரத்தால் அதில் வருவித்து பூசை செய்தல், பின் ஆன்மாவாக பூசித்து கல்லையும் அதற்குப் படைத்த பலி பொருட்களையும் நீர் நிலைகளில் சேர்த்தல் ஆகும். புனித புண்ணிய தீர்த்தமான சமுத்திரமே சிறந்ததாகும்.

## எட்டுப்பூசை

ஆன்மா பசி, தாகத்தினால் துன்புறுவதை நிவர்த்தி செய்யவும், சந்தோசமடையவும் செய்யப்படும் படையல் பூசை.

## ஏகோதிட்டம்

இறந்தவருடைய பிரேதத்துவநிலை நீங்க நினைத்து ஒரு அந்தணருக்கு வழங்கப்படும் தான நிகழ்வு. அவரவர் தகுதிக்கு ஏற்றவாறு வழங்கப்படும். ஒரு ஆண்டுக்குரிய பொருட்களைத் தானமாகக் கொடுத்து ஒரு வருடம் முடியும் வரை அவரை எதிர் கொள்ளாதிருத்தல் சிறந்ததாகும்.

## சபிண்டீகரணம்

இறந்தவரை பிதிர்தேவர்களோடு சேர்ப்பதற்காக, பிண்ட மிட்டுச் செய்யப்படும் கிரியையாகும்.

## பிண்டம்

பிண்டம் என்பது தேகம் என்பதாகும். இறந்தவரது ஆன்ம ஈடேற்ற பரிபூரண சித்தியின் பொருட்டு அரிசிமா, உழுந்துமா, எள்ளு, தயிர், பால், தேன், முப்பழம், நெய் என்னும் பொருட்களால் உருண்டையாக உருட்டி இடல் பிண்டமிடல் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிதிர்களுக்கு செய்யும் இக்கிரியை பிதிர்தேவர்கள் பெற்று, இறந்தவர்களுக்கும், அவர்களது முன்னோர்களுக்கும் வழங்குவர்.

## பிண்டமிடும் சந்தர்ப்பங்கள்

| | | |
|---|---|---|
| ஏகோதிட்டம் | – | ஒரு பிண்டம் |
| மாசி மகம் | – | பதினைந்து பிண்டம் |
| சபிண்டீகரணம் | – | ஏழு பிண்டம் |
| ஆப்திக வருட சிராார்த்தம் | – | நான்கு பிண்டம் |

## மஹாளய சிரார்த்தம்

மஹாளயம் என்பது மகான்களாகிய பிதிர்கள் பூவுலகில் தங்கும் காலமே மஹாளயம் என அழைக்கப்படுகிறது. புரட்டாதி மாதம் அபரபட்ச (தேய்பிறைக் காலம்) மஹாளயபட்சத் தினமாகும். இக் காலத்தில் இறந்த பிதிர்களைக் குறித்து தர்ப்பணமும் மஹாளய சிரார்த்தமும் செய்யப்பட வேண்டும். இக்காலத்தில் செய்யும் மஹாளய சிரார்த்தம் சிறப்பானதாகக் கொள்ளப்படுகிறது.

## சிரார்த்தத்துக்கு தேவையான பொருட்கள்

எலுமிச்சம்பழம், இஞ்சி, மஞ்சள், எண்ணெய், சிகைக்காய், எள், அரிசி மா, உழுந்து மா, பயறு, சர்க்கரை, தேன், பசுநெய், பசும்பால், பசுந்தயிர், முப்பழம், நெல்லரிசி, வாழைப்பழம், மாங்காய், பாகற்காய், அவரைக்காய், கீரை, முல்லையிலை, முசுட்டையிலை, காரையிலை, பிரண்டை, வெற்றிலை, பாக்கு, தேங்காய், இளநீர். கராம்பு, சாதிக்காய், ஏலம், சுக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிராார்த்தத்துக்கு ஆகாத பொருட்கள்

கடலை, பீர்க்கங்காய், பூசணிக்காய், முருங்கைக்காய், கத்தரிக்காய், அத்திக்காய், வாழைப்பூ, வெங்காயம், வெள்ளைப் பூண்டு, கொவ்வை, எருமைப்பால், எருமைத்தயிர்.

சிரார்த்தம் செய்யும் அந்தணருக்கு ஆடை, உணவுப் பொருள், பழங்கள் கொடுத்து ஆசீர்வாதம் பெறுதல் உத்தமமாகும்.

## சிரார்த்தம் செய்யுமிடம்

இறந்தவர்வீடு, திருநந்தவனம், மலை, திருக்கோயில், புண்ணிய தீர்த்தக்கரை, குருவின் மனை, சிரார்த்தம் செய்யும் நபரின் இல்லம் என்பனவாம்.

## சிரார்த்தம் நடைபெறும் போது செய்யத்தக்கன

வேத பாராயணம் செய்தல், தமிழ் வேதங்களையும், புராணங்களையும் ஓதுதல் இவை பிதிர்களுக்கு மிகத் திருப்தி யானவை ஆகும்.

## உபசாரம்

சிரார்த்த முடிவில் ஆசாரியருக்கு உபகாரஞ் செய்து அவரை உபசரித்து வணங்கி, ஆசீர்வாதம் பெறுதல் வேண்டும். உபசாரம் செய்யும் போது ஆசாரியருக்கு என்று எண்ணாது, பிதிர்தேவர்களுக்கு என்று எண்ணி கொடுக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபரக்கிரியைகள்

## அபரக்கிரியையின் சொல் விளக்கம்

அபரம் என்பது பிந்தியது என பொருள்படும். கிரியை என்பது நன்றாகச் செய்யப்படுவது எனப் பொருள்படும்.

ஒருவர் இறந்த பின்பு அவரது ஆத்மா இறைவனடி சேர வேண்டி அவரது புத்திரர் முதலியோரால் நன்றாகவும் ஆகம விதிப்படியும் செய்ப்படுவதே அபரக் கிரியையாகும். கிரியை செய்வதனால் இறந்த ஆன்மா பாவங்களினின்று நீங்கி சிவபதமடையும் என்பது எமது நம்பிக்கை. இல்லறத்தாருக்கு உரிய கடமைகளில் பிதிர் கடன் முதன்மை பெறுகிறது.

## அபரக்கிரியைகளின் வகை

தகனக்கிரியை, அஸ்தி சஞ்சயனம், அந்தியேட்டி, ஏகோதிட்டம், சபிண்டீகரணம், மாசியம், சிரார்த்தம்.

## அபரக்கிரியைகளின் மூன்று பாகங்கள்

தகனம் முதல் ஏகோதிட்டம் வரையுள்ள கிரியைகள் பூர்வாங்கமாகும்.

மாசியம் முதல் சபிண்டீகரணம் வரையுள்ள கிரியைகள் மத்தியாங்கமாகும்.

ஆப்திக சிரார்த்தம் மஹாளய சிரார்த்தம் உத்தராங்கமாகும். அபரக்கிரியைகள் பதினேழு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. உத்தராங்கி, பிண்டதானம், நவசிரார்த்தம், ஏகோதிட்டம், மாசிய ஆப்திகம், மஹாளயம் என்பன பிரதானமானவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உத்கிரைந்திக் கிரியை**

ஒருவருக்கு மரணம் அண்மித்ததை அறிந்து தமது குருவை வரவழைத்து பாபநீக்கத்தின் பொருட்டு, அக் குருவுக்கு கன்றோடு கூடிய பசு, ஆடை, உணவுப் பொருட்கள் என்பவற்றை புத்திரர்கள் அல்லது உரித்துடையோர் தானமாகக் கொடுத்தல் நாட்டு வழக்கில் தானம் கொடுத்தல் என்றும் சொல்லுவர்.

உயிர் உடலைவிட்டு நீங்கியபின் பூதவுடலைக் குளிப்பாட்டுதல் பின் புத்தாடை உடுத்தி, திருநீறு பூசி, திருப்பொற்சுண்ணமிடித்து இடிக்கப்பட்ட சேர்வையை கண்கள் இரண்டிலும் வைத்தல், பின் பந்தமேற்றி, பஞ்சபுராணம் பாடுதல்.

உடலை மயானத்திற்கு எடுத்துச் செல்லும் பொழுது அட்டதிக்கு தேவர்களின் ஆசியை பெறுவதற்காக சைவாசாரமுள்ள முதியவர் ஒருவர் வழிநீளம் நெற்பொரி வீசுவார்.

பூதவுடலுக்கு சிரார்த்த தினங்களைச் செய்பவர் சிவாக்கினியும் கும்பமும் எடுத்துக்கொண்டு உடன் செல்வார்.

அடுக்கப்பட்டிருக்கும் விறகின் மேல் உடலை வைத்து தற்புருஷ மந்திரத்தினால் நீரையும், அரிசியையும் இறந்தவர் வாயில் இட்டு, கும்பநீரை உடலுக்குத் தெளித்து சிவாக்கினியை விறகின் கண் இட்டு எரியச் செய்தல்.

**அஸ்தி சஞ்சயனம்**

எரிக்கப்பட்ட உடலிலிருந்து எலும்புகளையும் சாம்பலையும் எடுத்து புண்ணிய நீரில் சேர்ப்பதாகும். இக்கிரியையைச் சிவாக்கினியை விறகின் கண் இட்டு எரியச் செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அஸ்தி**

எரிக்கப்பட்ட உடலிலிருந்து எலும்புகளையும், சாம்பலையும் எடுத்து புண்ணிய நீரில் சேர்ப்பதாகும். இக்கிரியையைச் சாம்பல் அள்ளுதல் என்றும் கூறுவர்.

**நக்ன தானம்**

ஒரு நீர்க்கரையை அடைந்து ஒரு குடத்தில் அரிசியை நிரப்பி, அக்குடத்தினைச் சுற்றி வஸ்திரம் கட்டி, வெண்கலப் பாத்திரத்தில் நெய் ஊற்றி பரமசிவனை நினைத்தவாறு இறந்தவரின் பசி, தாகம் நீக்குமாறு வேண்டி, அந்தணருக்கு தானமாகக் கொடுப்பதுவாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை

| | | |
|---|---|---|
| வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம் | – | அதை நழுவ விடாதீர்கள் |
| வாழ்க்கை ஒரு பயணம் | – | அதை சென்று முடியுங்கள் |
| வாழ்க்கை ஒரு விடுகதை | – | அதை விடுவியுங்கள் |
| வாழ்க்கை ஒரு விளையாட்டு | – | அதில் ஈடுபடுங்கள் |
| வாழ்க்கை ஒரு போராட்டம் | – | அதை வென்று காட்டுங்கள் |
| வாழ்க்கை ஒரு வெகுமதி | – | அதை ஏற்றுக் கொள்ளுங்கள் |
| வாழ்க்கை ஒரு போட்டி | – | அதில் வெற்றி கொள்ளுங்கள் |
| வாழ்க்கை ஒரு கலை | – | அதை அழகுபடுத்துங்கள் |
| வாழ்க்கை ஒரு வேதனை | – | அதைத் தாங்கிக் கொள்ளுங்கள் |
| வாழ்க்கை ஒரு சவால் | – | அதை எதிர்கொள்ளுங்கள் |
| வாழ்க்கை ஒரு சோகம் | – | அதற்கு மனம் தளராதீர்கள் |
| வாழ்க்கை ஒரு பிரச்சனை | – | அதற்குத் தீர்வு காணுங்கள் |

# நேரத்தைச் செலவிடு

| | |
|---|---|
| உழைக்க நேரத்தை எடுத்துக்கொள் | அது வெற்றியின் விலை |
| சிந்திக்க நேரத்தை எடுத்துக் கொள் | அது சக்தியின் ஊற்று |
| விளையாட நேரத்தை எடுத்துக்கொள் | அது இளமையின் இரகசியம் |
| படிக்க நேரத்தை எடுத்துக்கொள் | அது அறிவின் வாயில் |
| நல்லவை புரிய நேரத்தை எடுத்துக்கொள் | அது இன்பத்தின் பாதை |
| கனவு காண நேரத்தை எடுத்துக்கொள் | அது சாதனைக்கு வழி |
| அன்பு காட்ட நேரத்தை எடுத்துக் கொள் | அது இறைவனின் கொடை |
| சிரித்து மகிழ நேரத்தை எடுத்துக் கொள் | அது இதயத்தின் இசை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை

மலர்வு
26 * 04 * 1944



உதிர்வு
15 * 06 * 2016

அமரர்

# திருமதி. பாலாம்பிகை நமசிவாயம்

அம்மாவே எங்கள் ஆருயிர் தெய்வமே
நித்தம் உங்கள் உருவம் கண்முன் நிழலாடுகிறதே
உங்கள் காலடி ஓசை காதில் கேட்டவண்ணம் உள்ளதே
உங்கள் புன்சிரிப்பு முகத்தை இனி எப்போ காண்போம் அம்மா!

தொலைவில் இருந்தாலும் நன்மை, தீமையை தொலைபேசியில் உணர்த்தினீர்களே
என் பிள்ளைகளுக்கு புத்திமதி சொன்னீர்களே அம்மா
இனி யார் கூறுவர் நல்வழி அம்மா
அன்பான வார்த்தைகளும் அரவணைப்புகளும் இனி
எங்களுக்கு எங்கே கிடைக்கும் அம்மா

பெறற்கரிய பிள்ளைகளாய் எமை பெற்றெடுத்தீர்கள் அம்மா
பிள்ளைகள் நலம்வாழ நாளும் தவமிருந்தீர்கள் அம்மா
எல்லோரையும் உங்கள் திறமையால் வழிநடத்தினீர்கள்
உங்கள் வருத்தத்தையும் எங்களால் அறிய முடியவில்லையே அம்மா!

தூரத்தில் இருந்து எங்களைத் தவிக்கவிட்டு
எங்கு சென்றீர்கள் அம்மா
இனி எப்போ காண்போம் உங்கள் திருமுகம் அம்மா!

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**
***ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!***

மகள்
காவேரி (கனடா)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளின் பரிதவிப்பு

அன்பான அம்மாவே!

பத்துத் திங்கள் கருவறையில்
பள்ளிகொள்ள வைத்தாய்
பகலிரவாய் விழித்திருந்து
பார்தனில் எங்களை ஈன்றாய்
எத்தனை இரவுகள்
எமக்காய் விழித்திருந்தாய்
எத்தனை கடமைகள்
எமக்காய் ஆற்றிருந்தாய்
முத்தாய் வைரமாய்
மணியாய் மரகதமாய்
முத்திட்டு அரவணைத்து
முழுமனதாய் காத்தாய்
பார்த்துப் பார்த்து பக்குவமாய்



பேணி கல்வி ஊட்டி
ஈதரித்து அனைத்தும் நல்கி
அன்பே உருவமாய்
ஆன எங்கள் அம்மா
உன் கடமை செய்து நாங்கள்
உளம் பூரித்துப் போக முன்னே
அத்தனையும் ஓர் கணத்தில்
அறவே நீங்கள் மறந்து விட்டு
பொட்டெனவே எமைத்துறந்து
போனதேனோ அம்மா!
பொய்யாக அழுதாலும்
மெய்வியர்ந்து கதறினாலும்
வராது போன எங்கள் அம்மா
உங்கள் ஆத்மாதான்
அடையட்டும் சாந்தி அம்மா

**பிள்ளைகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை



மருமகள் என்றதோர் உறவு இருந்தாலும்
மனம் நிறைந்த அன்பினால் எங்களையும்
மகள் என்றோ உணர வைத்தீர்கள்
கனிவான வார்த்தைளால் எம்மை அழைத்த மாமியே!
பாசமிகு மருமக்கள் பாவிகள் என்செய்வோம்.
சிரித்த முகமும் கனிவான பார்வையும்
எவருக்கு உதவும் பண்பும்
தமிழர் பண்பாட்டை நிலைநாட்டி
காலமெல்லாம் வாழ்ந்தீர்கள்
மறைந்தீர்கள் என்ற சொல் கனவாகப் போக
எம் நெஞ்சங்களில் நீங்கள் நீங்காமல் வாழ்க!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
நயினை நாகபூசணி அம்மனை வேண்டுகின்றோம்.



மருமகள் மார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் இதயக் கண்ணீர் அஞ்சலி



**மலர்வு** **உதிர்வு**

26.04.1944 15.06.2016

## அமரர் பாலாம்பிகை நமசிவாயம்

அருமை பெருமை மிகு அன்பான மாமியே!
உருமையுடன் பழகி உறவுகொண்டோம் நாமே!
மாமி மாமி என்று மனம் நிறைய கூப்பிட
நீங்கள் இன்று இல்லையே எம்முடன்
மண்ணில் பிறந்த மாந்தரெல்லாம் மண்ணில் மறைகின்றபோது
மனிதர் மறவாத மனிதருள் மாமியாக வாழ்ந்துசென்றீர்கள்.
உயிருள்ள கருவாக உறவுக்கு உயிராக வாழ்வின் வடிவமாக
உறவாடிய எங்கள் அன்பிற்கினிய மாமியே!
ஒப்புவமை இல்லா உயர்குணம் கொண்டெம்மை
பாசமாய் அரவணைத்து அன்புடன் பரிந்துரைப்பீர்!
செப்பும் வார்த்தையனைத்தும் செங்கரும்பின் தேன்சுவையே!
அருகிருந்து அறிவுரை புகட்டிய மாமியே!
என்றும் சிரித்த முகத்துடன் சீரிய வாழ்வும்
உற்றாரை உறவுகளை உணர்வுடன்
மதித்து மாண்புடன் வாழ்ந்தீர்கள்!
பொருள் வேண்டி நின்றதில்லை புகழ் வேண்டி நின்றதில்லை
மற்றவர் வாழ்வினில் ஒளி வேண்டி நின்றீர்கள்.
உலகு உள்ளவரை உங்கள் ஒளி எம் மனமதில்
நிலைத்திருக்கும். அன்பு மாமியே! மாமியே! மாமியே!

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!**

ஆத்மா சாந்திக்காக வேண்டி நிற்கும்
அன்பு மருமக்கள்
பதுமநிதி - ஜேர்மனி
நந்தகுமார் - நோர்வே
சரஸ்வதி - இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மண்ணில்
26
.
04
.
1944

விண்ணில்
15
.
06
.
2016

## அமரர் திருமதி
## பாலாம்பிகை நமசிவாயம்

உறங்காத உள்ளமொன்று உணர்வோடு போராடி
உறைவிடம் தேடிங்கே உயிர் மடி சேர்ந்ததேங்கே?
அலையலையாய் காரணங்கள்
ஆயிரமாய் குவிந்தலும்காலனவன் கவர்ந்திட்ட
உங்கள் இன்னுயிரை மீட்டிடுமோ?
பற்றோடு பாசமதை நட்போடு பகிர்ந்தளித்து
மெய்யான அன்பதனில்
எல்லோர்க்கும் இரங்கி நின்றாய்!
பொய்யான வாழ்வென்று புறப்பட்டு போனதெங்கே?
கடிமனம் உருகுதம்மா!
கண்ணில் நீர் பெருகுதம்மா!
எண்ணம்தான் இறைஞ்சுதம்மா!
உங்கள் ஆத்மா சாந்தி திண்ணமம்மா!
உதிர்வுகள் உடல்களுக்கு மட்டுமானது
பதிவுகள் பாசமனங்களில் நிரந்தரமானது
உறவுகளை அன்பால் இறுக்கிக் கொண்டவளே
ஆண்டவன் பாதங்கள் மட்டுமல்ல
எம் இதயங்களும் என்றென்றும்
உங்கள் ஆத்மாவின் இருப்பிடம்
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் பிரிவால் துயருறும்
பாலன் குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
26
*
04
*
1944



மறைவு
15
*
06
*
2016

## அமரர்
## திருமதி .பாலாம்பிகை நமசிவாயம்

எண்ணித்தான் பார்க்கின்றோம்
எப்படித்தான் ஆனதென்று
விழிநீர் கசிந்து விம்மி அழுகின்றோம்
அரும்பிய செந்தமிழ் தேன் பேச்சு எங்கே
கருவிழி கண்மூடிய காலத்தின் கோலமா இங்கே
சுடர்விட்டுப் பிரகாசித்த விளக்கு அணைந்ததுவோ!
அழுது புரண்டாலும் ஆறாது எம் துயர்
விதியோ காலனின் சதியோ
ஆண்டவரே உன் பாதம் சேர்ப்பாய்.

**அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்**

இவரின் பிரிவால் துயருறும்

கரன்.சசி.தயாளன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மண்ணில்
26
.
04
.
1944

விண்ணில்
15
.
06
.
2016

## அமரர் திருமதி
## பாலாம்பிகை நமசிவாயம்

அமைதியின் உருவமாகவும்....
அடக்கத்தின் இருப்பிடமாகவும்....
பண்பின் பெருந்தகையாகவும்....
பாசத்தின் உறைவிடமாகவும்....
எம்மத்தியில் அன்பு ஒளியாக
இருந்த உத்தமியே!
உள்ளன்போடு உறவுமுறை
பகிர்ந்து மகிழ்பவரே!
சுயநலமில்லாத உங்கள் அன்பொன்று
சூன்யமான போது
கண்ணீரில் முகம் பார்த்து
கடந்த காலங்களை மீட்டும் உணர்வுகள்
அதில் உதயமாகும் உங்கள்
பாசமான நினைவுகள்
மண்ணோடு உங்கள் பூவுடல்
மறைந்துவிட்டாலும் உங்கள் நினைவுகள்
எங்கள் இதயங்களில் இருந்து
ஒருபோதும் அஸ்தமிப்பதில்லை....
மலர்களில் சந்தனமலர் நீங்கள்!
என்றும் ஜயப்பன் பாதம் அலங்கரிப்பீர்கள்....
நித்தமும் நிமலனடி தொழுகின்றோம்....
உங்கள் ஆத்மா சாந்தி கொள்ள!!!
ஓம் சாந்தி!!! ஓம் சாந்தி!!! ஓம் சாந்தி!!!

உங்கள் பிரிவால் துயருறும்
**பெறாமக்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிநீர் சொரிகின்றோம்

மலர்வு
26 * 04 * 1944



உதிர்வு
15 * 06 * 2016

அமரர்

# திருமதி. பாலாம்பிகை நமசிவாயம்

மானிடப் பிறப்பெடுத்து வந்த அம்மம்மாவே - எங்கள்
மனங்களில் அழியாத காவியமானீர் - உங்கள்
நினைவின் தூறல்கள் எங்கள்
விழிகளில் கண்ணீர் துளிகள் ஆனதே

கவலையான நேரங்களில் கவலைகளை மறந்து சிரித்தும்,
மற்றவர்கள் ஏமாற்றுவதை அறிந்தும்
அறியாதது போல வாழ்ந்திட்ட உத்தமியே - எங்கள் தாயே
உம்மை இழக்கையிலே தான் எமக்குத் தெரிகிறது வாழ்க்கையின் சலிப்பு

கொஞ்சிக் குலாவி அன்பு செய்து
எல்லோர் மனதினையும் உம் வசமாக்குவதை
தினம் எண்ணிப் பார்க்கையிலே எல்லோர்
நெஞ்சங்களிலும் நீர் அன்னை தான்

படைக்கத் தெரிந்த பிரம்மனுக்கு - உங்களை
எங்களிடமிருந்து பறிக்கவும் தெரிந்ததே
எத்தனை யுகங்கள் மாறினாலும்
காலத்தை வென்றிடும் உங்கள் நினைவுகள்

தேடுகிறோம் உங்களை வாழ்வின் தேடல்களாய்
காண்கிறோம் எங்கள் மனங்களில் அம்பிகை ஈஸ்வரியாய்
வேண்டுகின்றோம் இறைவனிடம் நீங்கள்
மீண்டும் எங்கள் மனங்களில் அவதரிக்க...

*உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

உங்கள் பிரிவால் வாடிநிற்கும்,
பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 26 * 04 * 1944 | 15 * 06 * 2016 |

அமரர்

## திருமதி. பாலாம்பிகை நமசிவாயம்

எங்கள் அப்பாச்சி எல்லோருக்கும் நல்லவர். அப்பாச்சி எங்களிடம் கோபப்பட மாட்டார். நானும் தங்கச்சியும் அப்பாச்சியுடன் சேர்ந்து கடைகளுக்குப் போவோம். கடையில் நாங்கள் விரும்பும் இனிப்புவகை, விளையாட்டுப் பொருட்கள் எல்லாம் வாங்கித் தருவார். நாங்கள் பின்னேரத்தில் அவருடன் நடப்பதற்கு போவோம்.
அச்சமயத்தில் அப்பாச்சி பூங்காவில் சற்றுநேரம் ஓய்வு எடுப்பார். அந்நேரத்தில் நாங்கள் இருவரும் விளையாடுவோம். அதை அப்பாச்சி பார்த்து இரசித்துக் கொண்டிருப்பார். பிறகு வீட்டிற்கு சென்று ஓய்வு நேரத்தில் தொலைக்காட்சியில் நாடகங்கள், படங்கள் பார்ப்போம். சிலவேளைகளில் கொம்பியூட்டர் பழுதானால் எங்களிடம் கேட்டு திருத்துவார். நாங்கள் இருவரும் இரவில் அப்பாச்சியுடன் ஒருநாள் நானும், ஒருநாள் தங்கச்சியும் நித்திரை கொள்ளுவோம். காலையில் எங்களை பாடசாலைக்கு செல்வதற்காக எழுப்பிவிடுவார். நாங்கள் பாடசாலைக்கு வெளிக்கிடுவதற்கும் உதவி செய்வார். இனி யார் எங்களை எழுப்புவது? அப்பாச்சி உங்கள் பிரிவை எங்களால் தாங்க முடியவில்லை. அப்பாச்சி உங்கள் பிரிவால் துயருறும்....

**பேரப்பிள்ளைகள்**
**சாரங்கன், யாதவி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



பந்தம் பிடிக்க வழியில்லையே அப்பம்மாவே!
தொலைபேசி வழியே எம்மை
எப்படியம்மா எப்படியம்மா இருக்கிறாய்
எனக் கேட்பீர்கள்
பந்தம் பிடிக்க வழியில்லாது நாம் இங்கு
தூரத்தில் நிற்கின்றோம்
சாப்பிட்டு விட்டாயா? என்று எங்களை
தவறாமல் கேட்பீர்கள்
இன்று அப்படி எம்மை கேட்க
நீங்கள் இல்லாமையை எண்ணி
கலங்குகின்றோம்
எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்து
நீங்கள்
காலனவன் கால்களில் உறைந்ததை
எண்ணி வாடி நிற்கின்றோம்

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்

அன்பான பேரப்பிள்ளைகள்
**பகி – சகி – பவித்திரா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மண்ணில்
26
04
1944



விண்ணில்
15
06
2016

# அமரர் நமசிவாயம் பாலாம்பிகை

தங்கத் தமிழீழ தரணியதன் சிரமே யென
தானைத் தமிழர்தான் போற்றும் யாழ் மண்ணில்
பொங்குகடல் தாலாட்டும் புகழ் மாந்தர் வாழ்வூட்டும்
புங்குடுதீவின் கண்மணியே! - நீ
வணிகம் செய்யவென வன்னி மண்ணின் எழிலூராம்
முரசுமோட்டை தனில் ஏகி, பாங்கொடு பதியமைத்து
ஆங்குளோர் அனைவரையும் அரவணைத்து
பார்போற்ற வாழ்ந்திட்ட பாலாம்பிகையே!

அம்மாவே ஆசை குஞ்சியம்மாவே!
தாய்க்குத் தாயாய் வளர்த்தவரே!
இங்கு ஊரிழந்து, உறவிழந்து,
நாடிழந்து நாமிருக்க
கூடிழந்த குருவியதாய் - உன்
உயிரிழந்து தவிக்கின்றோம்
ஆல்போல் தளைத்த எம் சந்ததியின் ஆலமரம் நீ
இன்று அடியோடு சரிந்ததேனோ?

கண்டவுடன் எமையணைக்கும் கரங்கள் எங்கே?
வந்தவரை வரவேற்கும் வதனம் எங்கே?
புன்னகைப் பூவே! பூமியின் முத்தே!
சந்ததி வளர்த்த எங்கள் சங்கத்தமிழே
வாழ்ந்தது போதும் என்று வானகம் ஏகினையோ?
பூவுலக வாழ்வு முடித்து புறப்பட்டனையோ?

நாமமது கரைத்து நம(ச்)சிவாயம் அடிசேர
நீண்ட துயில் கொண்டு நெடுந்தூரம் சென்றவரே! - நீ
ஆண்டவன் அடியில் அமைதியாய் உறங்க
பூத உடல் விட்டுபோய் வா தமிழ்மகளே!
ஓம் சாந்தி சாந்தி! சாந்தி!

தங்கள் பிரிவால் துருறும்
பெறாமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் (சுவிஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிநீர் சொரிகின்றோம்

மலர்வு
26 . 04 . 1944



உதிர்வு
15 . 06 . 2016

அமரர்

## நமசிவாயம் பாலாம்பிகை

*இதயத்தின் தூறலில்*
*உயிர்ப்பிழந்து போனது*
*நேற்றிருந்த உறவு ஒன்று*
*இன்று முடிந்து போனது*
*காத்திருந்த உறவு*
*கண் விழித்துப் பாத்திருக்க*
*பாத்திருந்த மரணம்*
*பரிதவிக்கச் செய்தது*
*பேச்சிழந்து புலம்புகின்றோம்-புலம்பியொரு*
*வார்த்தை உன்னிடத்துத் தேடுகிறோம்*
*கண்ணிருக்க மணியில்லை - காற்றிருக்க*
*உயிரில்லை - இங்கே உறவிருக்க*
*நீர் அருகில்லை- உம்*
*நினைவோடு நாமும் வாழ்வோமே.*

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!! ஓம் சாந்தி!!!!

---


பிரிவால் வாடிநிற்கும்

## தமிழ் பேரவை-----பின்லாந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனியதோர் பரம்பரை






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்



*"எம்மை உயிருக்குயிராய் அன்புடன் அரவணைத்து நின்ற எமது குடும்பத் தலைவி"*

## அமரர் திருமதி.பாலாம்பிகை நமசிவாயம்

அவர்கள் சிவபதமடைந்த செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசியிலும், ஸ்கைப்பிலும், முகநூலிலும் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும், எமது தாய் நோயுற்றிருந்த போது நோய் குணமடைவதற்காக ஆலயங்களில் பொங்கல் பிரார்த்தனைகளில் ஈடுபட்டவர்களுக்கும், இறுதிக் கிரியை களின் போது வாகன வசதிகள், ஏனைய உதவிகள் புரிந்த அனைத்து பின்லாந்து உறவுகளுக்கும், மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் அச்சிட்டு வெளியிட்ட அனைவருக்கும், இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், கிரியைகளின் போது இறைவாழ்த்து பாடியவர்களுக்கும், அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், ஆத்மசாந்திக் கிரியைகளை நிறை வேற்றிய அந்தணப் பெருந்தகைகளிற்கும், மற்றும் இம் மலரை அழகுற அச்சிட்டுத் தந்த கோண்டாவில், யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சிவரஞ்சனம் ஒவ்செற் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தாருக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி.

பின்லாந்து.

இங்ஙனம்
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org